

THE LATE
H. E. MOUSTAFA KAMEL PASHA.

காலஞ்சென்ற
மேன்மைதங்கிய முஸ்தபா
காமல் பாசா.

C. A. C. PRESS

முஸ்லிம் பாதுகாவலன்.

THE "MUSLIM GUARDIAN."

புத்தகம் 6.] மாசி, 1908. [இலக்கம் 12.

VOL 6.] FEBRUARY 1908. [No. 12

# Notes by the Editor.

**The Late Muostafa Kamel Pasha.** We reproduce the portrait of the late Moustafa Kamel Pasha, to whose death we referred in our last issue. It appears in the morning of the 10th February he was suddenly seized by syncope and lost consciousness. But there was a slight improvement towards midday, yet a relapse soon occurred, and exactly at 4 o'clock His Excellency Moustafa Kamel Pasha expired.

He was born on the 14th August 1874, and at the age of six Moustafa Kamel was placed under the care of tutors, and shortly afterwards sent to the institute founded by the mother of Abbas Pasha I. in Cairo, for the purpose of completing his elementary education. After the death of his father, who was the chief engineer of Dakahlieh Province, his eldest brother, Hussein Bey Wassif, became his guardian. He was sent by his brother to Kerabieh school where among other scholastic successes he scored first place in an examination held in the presence of the late Khedive Tawfik, after which in his eleventh year he entered the secondary school. Having completed here. his course he made his exit as a brilliant and promising student. When he was fifteen years old he began to attend the lectures beth in the French and the Khedivial schools of law. Some time after, following the custom of his fellow students, he left for France where he obtained at Toulouse in his nineteenth year the licentiate of law. From that time he was seen plunged into politics, and his propaganda was only to end with his life.

" He did not" says the *Egyptian Standard* " need the caloric of a multitude and the public tribune, but was at all times eloquent, in private as well as in public, especially when he was dealing with the condition and affairs of his native land. In public meeting he aroused the enthusiasm of the people to fever-point, informed them and swayed them with the intense emotion of his own patriotism. He was a democratic speaker in the free and noble sense. All classes flocked to hear him, from the humble fellah to the opulent notable, and to one and all he preached the gospel of national brotherhood. From 1895 untill 1907 he delivered, unfailingly, long and carefully prepared speeches to the inhabitants of Cairo and

Alexandria, for with all his natural fluency and readiness he was never above thinking and planning out the discourses he was to make, so high was his conception of the importance and the responsibility of his mission.

Moustafa Kamel Pasha was very popular among the students classes. When he returned to Cairo from Europe a few months ago a huge concourse of students and others assembled at the Railway station to greet him. Seldom or never, it is said, has the city been the witness of such a triumphal entry or of such an ovation accorded to one of Egypt's sons. Though an orator and more inclined to use oratory as the vehicle for the expression of his patriotic sentiments, he was also an admirable writer, and was certainly one of the greatest journalists in the Mohammedan world. He wrote a treatise on Roman slavery, a book on "The Life of Nations", and a historical novel entitled "The conquest of Andalusia". Before he was out of his teens he founded a school review called *Al Madrassa*. Prior to the creation of the *Lewa* in 1900 he wrote in Arabic and French for the native and foreign newspapers and reviews. Lately he found time to complete a book on Japan and another on the Eastern Question.

He was profoundly acquainted with the French language, and this enabled him to press, as he found opportunities, the Egyptian Question on the attention of Europe. "Most of his European friends too" says the paper above quoted "were French, and there is, we can well imagine consternation among them to-day at the news of the tragic suddenness of his death. His personal magnetism was considerable, and he gained many adherents to his cause by his winning manners, and engaging conversation. His lifelong friend Madame Juliette Adam writes thus in a biographical preface which she contributed to a French edition of his speeches: 'He has gone all over Europe entering into relations with influential personalities in journalism and politics. His ardour, his conviction, if they did not succeed in convincing, at least succeeded in arousing interest and in breeding reflection.' Those journeys all over Europe of which Madame Adam speaks were fruitful in durable friendships prized by him not only for their intrinsic value but because of their serviceableness to his country. His main endeavour was thus to raise up a barrier against the tide of bigotry and denunciation of the native which were becoming common after the British Occupation. No one can deny that he succeeded. The high opinion which Frenchmen everywhere to-day entertain of the Egyptian people, and the great sympathy which the latter always profess for the former, are in no small degree the outcome of the propaganda set on foot by Moustafa Kamel Pasha. The Egyptians were fortunate indeed in having one so cultured, so attractive, so persevering as their spokesman in the presence of the intellectuals of Europe. Through speeches, interviews, and articles he displayed his indefatigable nature, and the devouring ardour of his faith in humanity."

Though Moustafa Kamel Pasha was entertaining the idea that Egypt could not make progress unless she boldly adopted the intellectual weapons of the West, and though he was always dwelling on the necessity of bringing the Orient and the Occident into closer harmony, yet he was a sincere adherent of Islam. His devotion to Turkey was great and unflinching though constantly misunderstood and misrepresented. Once he was presented by the Sultan with a golden cigarette case set with jewels, and endorsed with the Imperial autograph in brilliants. His Ma-

jesty the Sultan also conferred on him the Medjidieh of the Second Class, and the distinction of *Rutba-Ula-Sunfthani.*

His last great work was the organization of the National Party on the 27th December last. ' On that day", says the English organ of the Egyptian National Party above referred to, "Moustafa Kamel Pasha left his bed, though the hand of death was upon him, and delivered a long speech to a large concourse of his countrymen, a speech which we trust will ever find a fitting and a prominent place in the annals of Egyptian history. He forced himself to speak, he roused himself up to something resembling that old contagious enthusiasm which a few months before at Alexandria had rendered thousands delirious with emotion ; his audience frantically applauded him and pledged themselves to obey the statutes of the National Party which is his dying legacy to his countrymen. Then when his work was done, he crept back to bed, never to go out alive, never again to address his compatriots".

We are informed by the "Egyptian Standard" that his funeral was attended by about 100,000 people, and his admirers have started a movement to erect a statue to his memory, and so far collected for that purpose more than £. E. 2,500.

**England and Turkey.**

To the Mohammedans of Ceylon and India, who pay loyal and sincere allegience to His Majesty the King of England, and recognise the Sultan of Turkey as the Caliph of Islam, the policy pursued now by Sir Edward Grey of proposing to the powers to do certain things under the guise of reform in Macedonia which would, if done, have the effect of degrading the ruler of Turkey in the eye of the world and of encouraging his insurgent subjects to persevere, is giving some anxiety. Some time back England was the friend of Turkey, and there existed between them very cordial relation as is testified by the fact that they fought side by side with another European Power in the Crimean war. But unfortunately the policy of England towards Turkey was reversed during the time when the late Mr. Gladstone had in his hands the reins of the Government in England. As far as we can see Turkey has not done herself anything to merit the displeasure of England, but the British Government have to shape their foreign policy according to the public opinion in their country, and we all know that England is always the seat of many agitations. There are now in that country the Armenian and Macedonian committees the ultimate object of which is to free the countries which they respectively represent from the Turkish rule, and to achieve their object they utilize every opportunity that presents itself to them. Their *modus operandi* is first to influence the English public opinion through the press, and then get hold of the ear of the Foreign Minister. Their grievances are more or less imaginary, for the evils which are said to exist in the Turkish provinces are, when properly scrutinised, found to be only the ordinary evils from which no outlying district of a European or Asiatic country, is free. But the only difference is that such district lacks sympathising agitators abroad who would loudly proclaim to the civilised world its so - called grievances. Another point that we have to remember is that the agitators against Turkey and the European states which hearken their appeals are mutually benifited, for the movement made by the agitators affords a very grand opportunity to the powers to seek, under threat of retaliation, from Turkey political and commercial advantages. The following passage occurs in an article written in an Egyptian newspaper:

"Germany is apparently utilising the position of isolation into which she was thrown by England's method of *ententes* to support Austria in the furtherance of a scheme which meets with the greatest opposition in England, apparently on the philanthropic ground that Macedonian reform will be jeopardised, but in reality because Austrias' cordiality with the Sultan endangers British diplomatic interests in the Balkans. It would now appear that Russia is being conciliated by the determination of Austria and Germany not to oppose Russian railway schemes in the Balkans, and the situation is rapidly developing into one of extreme tension. It had been hoped in England that the Anglo-Russian agreement was the embryo of a more comprehensve *entente*, perhaps of an alliance; Austria and Germany seem now, however, determined to forestall England and capture Russia for themselves. Then England and her friends will be faced in the Balkans with the formidable coalition, the old and dreaded *Dreikaiser Bundniss.* Turkey supported by three such Powers as Austria, Germany and Russia has a valuable opportunity of reasserting her influence which she is not likely to neglect".

The above passage throws some light on the activity displayed recently by the British Foreign Minister with reference to Macedonia; and what the Muslim subjects of England living in her Eastern dependencies wish most ardently is that England should throw off the rôle of an opposer of Turkey, and, by becoming her true and candid friends, oust Germany and other Powers from her confidence, and thereby gain in the Turkish territories the advantages which are now accruing to the other European Powers. We all know that England has gained very little in Turkey since she assumed towards her a molesting and coercive policy. Is Egypt an obstacle in the way of an understanding between England and Turkey?

**Imprisonment for Debt.**

The readers of newspapers are now aware of the coming Ordinance to abolish imprisonment for debt. Much credit is due to our contemporary, the "Morning Leader", for the pains he has taken to prove to the public the advisability of having such a measure in order to save the people of Ceylon from the tyranny of money-lenders. The presumption is that the money-lenders would not advance money on loan to persons who are not in a position to give security for the money they borrow no sooner they are given to understood that imprisonment for debt is abolished in the Island; but we fear that, if imprisonment is to be enforced, as it is now said, in the case of persons who have failed to pay their debts incurred on account of goods purchased by them from merchants, the Chetty and other unscrupulous money-lenders will ingeniously contrive a method to secure their money by keeping their debtors liable to imprisonment. The readers know that it was the Chetties who originated the practise of receiving pro-notes without their amounts inserted thereon for paltry sums due, so that in case of failure to make payment on the part of the maker of the note, the notes might be filled with larger sums than actually due in order to send the defaulter to jail. Will not then an usurious Chetty demand from his intending needy borrower a peice of document along with his note acknowledging the receipt of say a few bags of rice for the value of which the note is granted, and thus place himself on the footing of a merchant than a mere money-lender. We cannot doubt that there would be men who would grant such document, when we know of men who sign and deliver blank notes. Therefore if the Ordinance is to be useful imprisonment for debt should be abolished in all cases.

# பரிசுத்த குர்ஆன்.

—o—

[நாம் பறக்கத்திற்காய்ச் சில குர்ஆன் வசனங்களின் அருத்தத்தை யெமது பத்திரிகையில் பிரசுரிக்கமுகுத் தீர்மானித்து இச்சந்திரிகையில் சில வசனங்களைத் தந்திருக்கின்றோம். அவற்றைக் கொண்டு வாசிப்பவர்கள் பிரயோசன மடைவார்களென்று நம்புகின்றோம்.]

## 1வது அதிகாரம்.

—o—

பெயர்: ஆரம்பம; மக்காவில் இறக்கப்பட்டது: வசனங்கள் 7.

1. சர்வ பராமரிப்பும் இரக்கமுமுள்ள அல்லாவின் நாமத்தைக்கொண்டு.

2. சர்வ சிருஷ்டிகளின நாயனான அல்லாவுக்கே எல்லாப்புகழும்.

3. சர்வ பராமரிப்புள்ளவன், இரக்கமுள்ளவன்.

4 நியாயத்தீர்ப்பின் நாளின் அரசன்.

5. உன்னையே நாங்கள் வணங்குகின்றோம். உன்னிடத்தே யுதவி தேடுகின்றோம.

6. எங்களைச் சரியான பாதையில் வழி காட்டு.

7. நீ கிருபைசெய்தாயா அவர்களின் பாதையில்; உன்னைக் கோபமூட்டினார்களே, அல்லது வழிதப்பிப் போகின்றார்களே அவர்களின் பாதையிலல்ல.

## 2வது அதிகாரம்.

பெயர்: பசு; மதீனாவில் இறக்கப்பட்டது; வசனங்கள் 286.

[சர்வ பராமரிப்பும் இரக்கமு முள்ள அல்லாவின் நாமத்தைக் கொண்டு.]

1. அலிபு, லாம், மீம். இந்நூலில் சந்தேகம் இல்லை.

2. (இது) தேவபத்தி யுள்ளவர்களுக் கோர் நேர் வழி.

3. அவர்கள் (மார்க்கத்தின்) இரகசியங்களை விசுவசிப்பவர்கள், தொழுகையை நோக்கின்றவர்கள், நாம் அவர்களுக்குக் கொடுத்திருப்பதிலிருந்து (தருமத்தில்) செலவழிப்பவர்கள்.

4. மேலும் அவர்கள் உமக்கு இறக்கப்பட்டிருப்பதிலும்; உமக்கு முன்னிறக்கப் பட்டிருப்பதிலும் விசுவசிப்பவர்களும், வரும் ஜீவியத்தை நிச்சயிப்பவர்களுமே.

5. இவர்கள் தங்கள் நாயனால் வழிகாட்டப்பட்டவர்கள். மேலும் அவர்கள் சித்தியடைவார்கள்.

6. விசுவாசங் கொள்ளாதவர்களுக்கோ, நீர் அவர்களை எச்சரித்தாலும் எச்சரிக்கா திருந்தாலும் அவர்களுக்கொன்றே; அவர்கள் விசுவசிக்க மாட்டார்கள்.

7. அவர்களின் இருதயங்களுக்கும் கேள்விக்கும் அல்லா முத்திரையிட்டான். மேலும் அவர்களின் கண்களை யோர் திரை மூடிக்கொண்டிருக்கிறது. மேலும் அவர்கள் ஓர் கொடிய ஆக்கினையை யனுபவிப்பார்கள்.

8. நாங்கள் அல்லாவையும் கடைசியான நாளையும் விசுவசிக்கி

ன்றோம் என்று சொல்லுகின்றவர்களானாலும் மெய்யான விசுவாசிகளல்லாத சிலர் இருக்கின்றார்கள்.

9. அவர்கள் அல்லாவையும் விசுவாசங் கொண்டவர்களையும் ஏமாற்றுதற்கு நாடுகின்றார்கள்; ஆகிலும் அவர்கள் தங்களையே யேமாற்றிக் கொள்ளுகின்றார்கள். இதை யவர்கள் அறிந்தவர்களல்ல.

10. அவர்களின் இருதயங்களில் ஓர் நோய் இருக்கின்றது. அல்லா அந்நோயை யதிகப்படுத்தி இருக்கின்றான்; அவர்கள் நம்பாதிருப்பதற்காய் அவர்கள் மெத்தத் துன்பமுள்ள ஆக்கினையை யனுபவிப்பார்கள்.

(வரும்.)

---

## ஸார். செய்யது அகுமது கான்.

—:O:—

(446 பக்கம் தொடர்ச்சி.)

டாக்டர் ஹன்டர் என்பவர் "எங்கள் இந்திய முஸ்லிம்கள் இராணிக்கு விரோதமாய்க் கலகஞ் செய்தற்குக் கடமைப்பட்டவர்களா?" என்ற நாமத்தோடு எழுதிய புத்தகத்தில் முஸ்லிம்கள் பிரிட்டிஷ் அரசாட்சிக்குப் பக்தியுள்ளவர்களல்லவென்று கூறியிருந்ததால் அவருக்கு உத்தரமுடியும், அவரின் சொற்களைக் கண்டித்தும் செய்யது அகுமது கான் ஓர் "ரிவியூ" பிரசுரித்தனர். செய்யது அகுமது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தநாள் முதல் ஓர் பாடசாலை ஸ்தாபித்தற்காய் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து பணஞ் சேர்க்கின்றவராயிருந்தனர். அப்பாடசாலை அரசாட்சியை விட்டும் நீங்கி இருப்பதையும் அதன் மாணாக்கர்களுக்கு வேத கல்வியும் உலக கல்வியும் படித்துக்கொடுப்பதையும் அப்பாடசாலையில் புற மார்க்கத்தவர்களும் கற்க இடங் கொடுப்பதையும் செய்யது அகுமது கான் விரும்பினர். அப்பாடசாலையை ஸ்தாபித்தற்கு வோர் காரிய சபை 1872ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1885ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. அதுவே இக்காலத்தில் "அலிகர் கலேஜ்" என்று அழைக்கப்படுகின்றது. ஸார் விலியம் முயர் அப்பாடசாலையை 1875ம் ஆண்டு நவம்பர் மாதம் தரிசித்து அங்கு உபந்நியாசித்தனர். 1886ம் ஆண்டு செய்யது அகுமது கான் முப்பத்தேழு வருடம் பிரிட்டிஷ் அரசாட்சியை சேவித்துவிட்டு உபகாரச சம்பளத்தோடு விலகி அலிகரில குடியிருந்தனர். மேற்படி பாடசாலையின் புதிய கட்டடத்தின் அத்திவாரம் 1877ம் ஆண்டு லார்டு லீற்றனால் போடப்பட்டது. அத்தருணத்தில இந்திய வைஸ்ராயாவிருந்த லார்டு லிப்பன் அவர்களுக்கு மேற்படி பாடசாலையின் காரிய சபையால் ஓர் வாழ்த்துப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டதோடு ஸார் செய்யது அகுமது கான் அவர்களுடைய வீட்டில் ஓர் விருந்தும் கொடுக்கப்பட்டது. மேற்படி பாடசாலை கட்டப்பட்டிருக்கிற விஸ்தாரமான நிலம் அரசாட்சியாரால்; கொடுக்கப்பட்டது. லார்டு லீற்றனுக்குமுன் இந்திய வைஸ்ராயாயிருந்த லார்டு நோர்த்புறூக்கு பதினாயிரம் ரூபா மேற்படி பாடசாலையின் நிதிக்குக் கொடுத்தனர். சார் விலியம்

முயர், சார். ஜோன் ஸ்திரச்சி, லோர்டு ஸ்றன்லி-ஆப்-ஆல்டர்லி ஆகியவர்களும் மேற்படி நிதிக்குப் பொருளுதவி செய்தார்கள். சிரீ மகாராஜ ராஜா மோஹந்தர் ஸிங்கு (பாதியாலாவின் மகாராசா) ஐம்பத்தெட்டாயிரம் ரூபா கொடுத்தனர். ஹைதிராபாது நிஸாம் அவர்கள் 90,000 ரூபா மேற்படி நிதிக்குக் கொடுத்தார்கள். மேற்படி பாடசாலையின நிதி சேகரித்த காரிய சபையின் அங்கத்தவர்கள் அலிகார் கல்லூரியில் ஓர் விருந்து கொடுத்தார்கள். அதில் அறுபது விருந்தாளர்களிருந்தார்கள். அங்கு பிரசன்னராயிருந்த சார் செய்யது அகுமது கான் தமது சுகவாழ்வைக் குறித்து மெஸ். கின் என்பவர் கூறியதற்கு மறுமொழியாகச் சொன்னதாவது:—

“நீங்கள் எனது சுகவாழ்வைக் குறித்த உற்சாகம் என மனதில் கலப்பான எண்ணங்களை யுண்டாக்கியிருக்கின்றது. நீங்கள் எனக்குச் செய்த பெருமரியாதைக்காய் நானுங்களுக்குக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். இன்றையின் காரியங்களை ஒழுங்காய் முடிந்ததற்காய் நான் சந்தோஷப்படுகின்றேன். ஆனால் இந்த எண்ணங்களோடு எனக்கின்னு மோர் எண்ணமிருக்கின்றது. அதாவது நீங்கள் எனக்குச்செய்த சங்கைக்கு நான் தகுதியுடையவனல்லவென்றதும, முகம்மதியர் அங்கிலோ ஓரியண்டல் கொலேஜ் இதுவரையில் அடைந்த அனுகூலத்திற்கு நீங்களெண்ணிய அளவுக்கு எனது முயற்சி காரணமல்லவென்றதுமே. ஆனால் துரைமார்களோ நான் உண்மையோடும சந்தேகமில்லாமலும் ஏற்றுக்கொள்ளுகின்ற வொரு காரியமிருக்கின்றது. அதாவது இன்று ஆத்திவாரமிடப்பட்ட கல்லூரியே எனது ஆயுசின் பிரதான நோக்கமாயிருந்ததென்றதே. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கொண்டாட்ட விஷயங்களை யான் ஆலோசிக்கத் துவங்கிய பொழுது நெருக்கமான சம்பந்தத்தில் தெய்வத்தால் வைக்கப்பட்டுள்ள இருசாதிகளுக் கிடையில் உண்மையான பட்சமும் அன்னியோன்னியமான எண்ணமும் இல்லாதிருப்பது எனக்குத் தோன்றிற்று. நூறு வருடம் இத்தேசத்தை இங்கிலீஷியர் ஆண்டும் சுதேசிகளுக்கும் பகிரங்கவிஷயங்களை நடத்தும் அதிகாரம் தெய்வத்தால் கொடுக்கப்பட்டவர்களுக்கும் இடையில் நெருக்கம் அதிகப்படாதிருக்கிற காரணம் யாதென்று யான் பலமுறையில் என்னிடமே கேட்டேன். துரைமார்களே நீங்கள் நூறு வருடங்களுக்கதிகம நாங்கள் குடியிருக்கின்ற இத்தேசத்தில் வசிக்கின்றீர்கள். அதே ஆகாயத்தை சுவாசித்தீர்கள். அந்த ஜலத்தைக் குடித்தீர்கள். இலட்சக்கணக்கான இந்திய பிரஜைகளுக்கு உணவைக் கொடுத்த தானியத்தையே நீங்களும உண்டு சீவித்திருக்கின்றீர்கள். ஆகிலும் நேசம என்ற சொல்லைக் கொண்டு அறியப்படுகின்ற கொண்டாட்டமான உறவு இத்தேசத்திலுள்ள இங்கிலீஷியருக்கும் சுதேசிகளுக்கும இடையில் காணப்படாதிருப்பது மெத்தத் துக்கமான காரியம். காரியங்களின் இந்த திருத்தியற்ற நிலைமையின் காரணங்களை யான் ஆலோசித்த பொழுதெல்லாம அந்த இருசாதிகளுக்குமிடையில் அன்னியோன்னியமான எண்ணமில்லாதிருப்பதற்குக் காரணம அன்னியோன்னியமான கருத்துகளும் அன்னியோன்னியமான காரி

யங்களுமில்லாதிருப்பதேயென்று யான் மாறுமல் தீர்மானித்தேன். மேலும் துரைமார்களே இந்த நிலைமை யுண்டாயிருக்கும் காலமெல்லாம் இந்திய முஸ்லிம்கள் இங்கிலீஷ் ஆளுகையின்கீழ் தேர்ச்சியடையக்கூடாது. அப்பொழுது தேர்ச்சிக்குள்ள இந்தத் தடைகளைக் கல்வியேயன்றி வேறொன்றும அகற்றுதென்று எனக்குத் தோன்றிற்று. ஆதலால் மெய்யான கல்வியைப் பரப்புகின்ற நோக்கத்தை நிறைவேற்றுதற்கு எனது ஆயுசில் மிக்க ஆக்கமுள்ள காலங்களையும் எனது கிழமையான தத்துவத்திற் குட்பட்ட தக்க முயற்சிகளையும செலவழித்தேன். இப்பாடசாலை ஒரு அளவுக்கு எனது தாழ்மையான முயற்சிகளிலிருந்து உற்பத்தியானதென்பது மெய். ஆகிலும் வேறு மனிதர்களுமிருக்கின்றார்கள். அவர்களுடைய உதவி மிக்க பெறுமதியுள்ளதாய் இருப்பது மாத்திரமல்ல எங்கள முயற்சி யனுகூலப்படுதற்கு முக்கியமாய்த் தேவையாயுமிருந்தது. மேலும அனுகூலத்தின் கண்ணியம அவர்களுக்கேயன்றி எனக்குச் செல்லவேண்டியதில்லை. ஆகிலும துரைமார்களே நீங்கள் இன்றிரவு எனக்குச் சொந்தமாய்ச் செய்த கனம் ஓர் பெரிய காரியத்தை யெனக்கு நிச்சயப்படுத்துகின்றது. மேலும் அது சொந்த நன்றியைப்பார்க்கிலும் அதிக உயர்வான தன்மையிலுள்ள எண்ணங்களையென் மனதில் நிரப்பிவிட்டது. அதாவது இந்தத் தருணத்தில் பிரிட்டிஷ் அரசாட்சியின் பிரதிநிதிகளாய் இருக்கின்ற நீங்கள் எங்களின் முயற்சிகளில் அனுதாபமுள்ளவர்களா யிருக்கின்றீர்களென்ற உறுதி எனக்குண்டாயிருப்பதே. இந்த உறுதி எனக்குப் பெறுமதியுள்ளதாயும் பெரும் ஆனந்தத்தைத் தருகின்றதாயும் இருக்கின்றது. அனேக வருடங்களாயும் இப்பொழுதும் எனது ஆயுசின் முழுநோக்கமா யிருக்கின்ற இம்முயற்சி ஒரு பக்கத்தில் என் தேசத்தவர்களின் ஊக்கத்தை யெழுப்பிவிட்டதென்றும் மறுபக்கத்தில் பிரிட்டிஷியர்களின் பட்சத்தையும் எங்களரசாட்சியார்களின் உதவியையும் பெற்றுக்கொண்டதென்றும் உணர்கிறது எனது இந்தவயதில் பெரும் ஆறுதலைத் தருகின்றது. எனது ஆயுளில் மீதமுள்ள சொற்ப காலமும் கழிந்து யான் உங்களுக்கிடையில் இல்லாமற்போன காலத்திலும பாடசாலை சித்தியடைந்து எனது தேசத்தவர்களுக்குக் கல்வியைக்கொடுத்து அவர்கள் நான் செய்தவாறு தம் தேசத்தை யுவக்கவும, பிரிட்டிஷ் அரசாட்சிக்கு பதியுள்ளவர்களா யிருக்கவும, அதன் பேறுகளை நன்குமதிக்கவும பிரிட்டிஷியர்களோடு உண்மையான நேசம வைக்கவும் செய்யும். துரைமார்களே. நீங்களின்று என்னை கனப்படுத்தியதற்காய் நானுங்களுக்குத் திரும்பவும் நன்றி கூறுகின்றேன். மேலும் நீங்கள் இன்றிரவு வெளிப்படுத்திய நலமெண்ணங்களுக்கு பதலளிக்கின்றேன்" என்றதே.

1878ம் ஆண்டு செய்யது அகுமது கான் இந்திய வைஸ்ராயின் சங்கத்தின் ஓர் அங்கத்தவராய் லோர்ட் லிற்றனால் ஏற்படுத்தப்பட்டனர். அவர் இரண்டு வருடம் கழிந்தபிறகு திரும்பவும் 1880ம் ஆண்டு லோர்ட் றிப்பனால் மேற்படி சங்கத்தின் அங்கத்தவராய் ஏற்படுத்தப்பட்டனர். 1882ம் ஆண்டு மே மாதம் ஹைதிருபாதின் முதன் மந்திரியான ஸார் ஸாலர்ஜங் செய்யது அகு

மதுகானைச் சந்தித்ததோடு மேற்படி பாடசாலையையும் தெரிசித்தனர். இந்திய வைஸறாயாயிருந்தலோர்டு றிப்பன் மேற்படி பாடசாலையை 1884ம் ஆண்டு நவம்பர் மாதம் விஜயஞ்செய்தபொழுது அவருக்கு ஓர் வாழ்த்துப் பத்திரம பாடசாலைக்காரிய சபையால் சமர்ப்பிக்கப்பட்டது. 1884 ம் ஆண்டில் சார் செய்யது அகுமது கான் மூன்று நண்பர்களோடு அலிகரிலிருந்து பஞ்சாபுக்குப் பிரயாணமாயினர். அவர்கள் வழியில் லூடியானுவில் இறங்கியபொழுது பெருந்திரளான ஜனங்களால் மிக்க சன்மானத்தோடழைக்கப்பட்டார்கள். அவர்கள் அஙகு நவாபு அலி முகம்மது கான் பஹதூர் அவர்களுடைய வீட்டில் தங்கியிருந்தார்கள். பகற்காலத்தில் பலர் அவ்வீட்டிற்கு வந்து செய்யது அகுமதுகானோடு அவருக்கும் மற்றும முஸ்லிமகளுக்கும இடையில் தர்க்கத்திலிருந்த வேதவிஷயங்களைக் குறித்துச் சம்பாஷித்தார்கள். அங்குள்ள தவுன்ஹாலில் செய்யது அகுமது கான் பெருங்கூட்டமான ஜனங்கள் முன் பிரசஙகித்தனர். அவரின் பேச்சும் அங்கு உபந்நியாசித்த மற்றவர்களின் பேச்சுகளும அழுத்தத்தக்கவைகளாயிருந்தன. அவற்றைக்கேட்ட சிலர் அழுதார்களாம். அன்று லூடியானு முஸ்லிம்களுள் பலரால் செய்யது அகுமதுகானைப் புகழ்ந்து பல தததுவமுள்ள உபந்நியாசஙகள் செய்யப்பட்டன. அங்குள்ள முஸ்லிம்கள் செய்யது அகுமதுகானின் பாடசாலைக்கு 1584 ரூபா கொடுத்தார்கள். லூடியானுவிலிருந்து செய்யது அகுமது கான் ஜலந்தருக்குச்சென்றனர். அஙகும் அவருக்குத் தகக மரியாதை செய்யப்பட்டது.

அங்கு அவரின் பிரசங்கத்தைக் கேட்பதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடினார்கள். அங்கு அவருக்கு மூன்று வாழ்த்துப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. அவர் கர்த்தபூருக்குப் போனபொழுது அங்குள்ள நாட்டுப் பாடசாலை யொன்றின் மாணுக்கர்களிடம் இரண்டணுவீதம் அறவு பண்ணப்பட்ட ரூபா எட்டு அணு ஒன்பதையும் இராமகூஷ்ந்தர் என்றவோர் இந்து செய்யது அகுமதுக்கு அவரின் பாடசாலைக்காய்க கொடுக்க அந்தத்தொகையை யவர் மிக்க நன்றியோடு பெற்றுக் கொண்டனர். அவருக்கு அம்ரிட்ஸர் பட்டணத்தில் ஓர் பெரும் விருந்தும் வாழ்த்துப் பத்திரமும் 1500 ரூபாவும கொடுக்கப்பட்டன. கர்தாஸ்புரிலும் செய்யது அகுமது கான் சஙகையோடழைக்கப்பட்டு வாழ்த்துப்பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டனர். அவரால் அங்குள்ள பாடசாலையில் ஓர் பிரசங்கம பிரசங்கிக்கப்பட்டது. அங்குள்ள பெண்களும் செய்யது அகுமதுகானுக்கு ஓர் வாழ்த்துப் பத்திரம் சமர்ப்பித்ததோடு 327 ரூபாவும் சேர்த்து அனுப்பினார்கள். செய்யது அகுமது கானின் நண்பரான ஹயாத்து முகமமது கான் அவருக்கு 1000 ரூபாவின் ஒரு நோட்டைக் கொடுத்ததோடு இன்னும் 500ரூபா கொடுப்பதாய் வாக்களித்தனர். மேலும் கர்தாஸ்பரின் குடிஜனங்களிடம் சேர்க்கப்பட்ட 819 ரூபாவும 4 அணுவும் செய்யது அகுமது கானுக்குக் கொடுக்கப்பட்டன. அவர் லாஹோரில் சேர்ந்தபொழுது தம்மை யழைப்பதற்காய் வந்த மனிதர்கள் றெயில்வே ஸ்டேஷனின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரையில் கூடியிருந்ததைக் கண்டனர். ஸே

ஷனிலிருந்து வண்டிவரையில் அவர் நடந்துபோகிறதற்குச் சிவப்புப்புடவை விரிக்கப்பட்டிருந்தது. அவர் மிக்க மகிழ்ச்சியோடு அங்கீகரிக்கப்பட்டனர். பல இந்துக்களும் முஸ்லிம்களும் அவரைச் சந்தித்தார்கள். அவருக்கு வாழ்த்துப்பத்திரங்கள் முஸ்லிம் சபையாலும் இந்திய சங்கத்தாலும் கொடுக்கப்பட்டன. அவருக்குப் பாடசாலை நிதிக்காய் இந்திய சங்கத்தால் 1380 ரூபாவும் முஸ்லிம் சங்கத்தாலும் லாஹோர் முஸ்லிம் குடிஜனங்களாலும் 2074 ரூபாவும் கொடுக்கப்பட்டன.

1884ம் ஆண்டு ஹைதிராபாத்தின் புதிய முதன் மந்திரியும் காலஞ்சென்ற ஸார் ஸாலார் ஜங்கின் புதல்வருமான நவாபு ஸாலார் ஜங் அலிகர் கல்லூரியை விஜயஞ்செய்தனர். அவருக்கோர் விருந்தளிக்கப்பட்டது. அதிலவர் பேசும்பொழுது நிஸாம் அவர்களின் அரசாட்சியால் மேற்படி பாடசாலைக்குக் கொடுக்கப்பட்ட வருடாந்த வுதவிப் பணத்தோடு வருடம் 3000 ரூபா மேலதிகமாய் இனிமேல் கொடுக்கப்படுமென்று கூறினார்.

கடைசியாய் செய்யது அஹமது கானின் வீட்டையும், நடக்கையையும் சொந்தத் தன்மையையும் குறித்து அவரின் சரித்திரத்தை யெழுதிய லப்றினன்று கானல் கிறஹாம் சொல்லியிருக்கிறதாவது:—

“செய்யது அஹமது கான் இப்பொழுது கொஞ்சகாலமாய் அலிகரில் அவரின் சவுக்கியமுள்ள வீட்டில் குடியிருக்கின்றனர். அந்த வீடு அவருக்காய் அவரின் மகன் ஹொன்றபல் செய்யது மஹ்மூதால் வாங்கப்பட்டு ஐரோப்பிய தன்மையில் சாமான்களிடப்பட்டிருக்கிறது. இதில் அவர் தன்னை இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்து சந்திக்கின்ற முகம்மதியர், ஸிக்குசாதியார், இந்துக்கள், இங்கிலீஷியர் ஆகிய விருந்தாளிகளை யுபசரித்தனர். அதன் வாசல்கள் எப்பொழுதும் திறந்திருக்கின்றன, அதன் ஆகாயம் கலவிசசுகந்தமுள்ளதாயிருக்கின்றது. அவர் தம்முடைய அதிக நேரத்தை வாசித்தலிலும் எழுத்திலும் செலவு செய்கின்ற அறை புத்தகங்களையும் பத்திரிகைகளையும் கொண்டு நிரப்பப்பட்டிருக்கின்றது. அவர் சாப்பிடுகிற அறையின் மதில்கள் தக்க இங்கிலீஷ் நூற்களைக் கொண்டு நிரப்பப்பட்ட புஸ்தக பீடங்களைக்கொண்டு மூடப்பட்டிருக்கின்றன. அவரின் புத்தக சாலையில் பல நூற்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அவர் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் வியாக்கியானம் எழுதும்பொழுது உபயோகித்த பல வேத நூற்களிருக்கின்றன. செய்யது அஹமதின் மகன் செய்யது மஹ்மூது கேம்பிரிஜ் கல்லூரியில் இங்கிலீஷ் பிரபந்தத்திற்காய்ப் பெற்றுக்கொண்ட வெகுமதிப் புத்தகமும் (பிறைஸ்) அங்கிருக்கின்றது. அது எனக்கு மெத்த பிரதானமானதாய்த் தோன்றிற்று. சந்திப்பறையில் அவர் ரோயல் ஏசியாற்றிக் ஸொஸைற்றியின் ‘பெலோவாய்’ ஏற்படுத்தப்பட்டபொழுது கொடுக்கப்பட்ட தத்துவ பத்திரம் வைக்கப்பட்டிருக்கின்றது. அது அவருக்குப் பெருமையைக் கொடுக்கின்றது. முன்சுவரில் அவரின் நண்பரான சார் ஜோன் ஸ்திராச்சியின் முழுப்படம் வைக்கப்பட்டிருக்கிறது. சார் ஸாலார்ஜாங், லோர்டு லீற்றன், ஹைதிராபாதி

ன் நிஸாம ஆகியவர்களின் படங்
களும் இருக்கின்றன. அவரின்
நாட்கள் சந்தோஷமாயும் தீவிர
மாயும் கழிகின்றன. அவரின் வி
சேஷ சுயதன்மையுள்ள குணமா
கிறது களைக்காத ஊக்கமே. சாதி
யைப்பற்றிய பிரதான விஷயங்க
ளில் அவரிடம் விரிவான கருத்
துகளிருந்தன. மேலும் அவர் அ
ற்ப விபரங்களையும் கவனித்து
வேலை செய்யும் அதிஜயமான
தத்துவத்தையுடையவரா யிரு
ந்தனர். அவர் காலை நாலு ம
ணிக்கெழுந்து புதினப் பத்திரி
கையில் பிரசுரிக்கவேண்டிய செ
ய்திகளையும், தமது புத்தகங்களை
யும எழுதுகின்றார். தமமைச் ச
ந்திக்க வரும் உத்தியோகத்தர்க
ளையும் மற்றவர்களையும் காண்கி
ன்றார். பாடசாலை காரியசபையி
ன எழுத்துக்காரியஸ்தராய்த் தா
ம் செய்யவேண்டிய பாரமான
வேலைகளைப் பகலிலும் இரவிலு
ம செய்கின்றார். அவரில உயர்
தரமான மனவேலை நீண்ட ஆயு
சுக்கும நலல சுகத்துக்கும இட
ங்கொடுக்கின்றது. அவரின் சா
ப்பாடுகள் ஐரோப்பியரின் ஒழுங்
குப்படி வைக்கப்படுகின்றன. அ
வர் மதுபானம் அருந்துவதில்
லை. அவர் இராச்சாப்பாடு அருந்
தும்பொழுதும அதன் பின்னும
நண்பர்கள் வருகிறார்கள். அவர
களின் சம்பாஷணையில ஞானம,
வேதம, அரசாங்க விஷயம முத
லியவைகளும் பெர்ஷிய புலவர்க
ளின் சொறகளும் நளினமான க
தைகளும் குமிக்கப்படுகின்றன.
அவர மத்திய உயரமும் பெருந்
தேகமும் சிவந்த முகமும் உடையவ
ர். அவரின் முகம் மௌனமாயிரு
க்கையில் கடினமானதாயிருந்தா
லும் பேசும்பொழுது உல்லாச
மாய்த் தோன்றுகின்றது. அவர்
உற்சாகமுள்ள சிரிப்பும பரிகாச
முமுள்ளவர். அவர் சில வருடங்க
ளாய்த் தாரமிழந்தவரா யிருக்கி
ன்றார். அவர் ஒருநாள் கண்களை இ
மைத்துக்கொண்டு "நான் திரும்
பவும் விவாகஞ் செய்யக்கூடும்.
அவள் இங்கிலீஷ் பெண்ணாயிரு
க்கவேண்டும். அப்பொழுதே நா
ன் இங்கிலீஷ்காரர்களுக்குள் அ
திக தாராளமாய் ஊடாடக்கூடி
யவனாயிருப்பேன். மேலும் அவ
ள் எண்பது வயதுள்ளவளாயும்
எல்லாப் பற்களையும் இழந்தவ
ளாயும் இருத்தல் வேண்டும்" எ
ன்று என்னிடம் சொன்னார். அ
வர் சாதுரியமான பிரசங்கியாய
ப பிறந்தவர். ஊக்கமாய்ப் பேசு
ம்பொழுது அவருடைய பேசசு
மெஸ். கிலாட்ஸ்ரோனின் பேச்
சை யொத்திருக்கின்றது. அவ
ரோர் சர்வ தேசாபிமானி, முஸ்
லிம்களுக்குள் கல்வியைப் பரப்பு
தற்கு வைக்கப்பட்ட முயற்சியி
ன் தலைவராய் இருந்தற்கு அவ
ரே தகுதியுடைவர். வேறெந்த மு
ஸலிம் துரைமகனிலாவது செய்
யது அகுமதுகானின் சாமர்த்
தியமும், சாதுரியமும், கீர்த்தியு
ம, சர்வதேசாபிமானமும், ஊக
கமும் விடாமுயற்சியும் காணப
படவில்லை. அவருடைய முயற்
சி யிலலாதிருக்கில் முஸலிம சா
கியத்தார் கல்வியில் இந்துக்களு
க்கு அதிகம பின்னிட்டவர்களா
கவே இருப்பார்கள். மேறபடி மு
யற்சி முன்போலவே இனிமேலு
ம் துரிதமாய் அதிகப்படுமாயின்
முஸலிமகள் கல்வியில இந்துக்
களுக்குச சரியாகி விடுவார்கள்.
சென்ற நாற்பது வருடங்களில
இந்தியாவில காரியங்களின் நிலை
யை அடக்கமாய் மாற்றிவந்த வ
ல்லமையுள்ள தத்துவங்களுள் மி
க்க மேன்மையுள்ளதாய் செய்ய
து அகுமதுகானின் நாமம் வரு

ங்காலத்திலுள்ளவர்களால் கவனிக்கப்படும்" என்றதே.

செய்யது அருமதுகான் மவுத்தாகிறதற்குச சில வருடங்களுக்கு முன் நைட் பட்டமும் எல். எல். டி. பட்டமும் கொடுக்கப்பட்டனர்.

---

## அலதீன் பேயின் கதை.

387 ம் பக்கத்தொடர்.

நாங்கள் இப்பொழுது கைரிகர்மானை கவனிக்கவேண்டும். நற்குணமுள்ள அலதீனைப் பயங்கரமுள்ள கள்ளனை கைரிகர்மான் என்று லய்லா தவறாய் எண்ணியதுபோல் வாசிப்பவர்கள் எண்ணமாட்டார்கள். ஆகிலும் லய்லா அவ்வித தப்பெண்ணத்தைக் கொள்ளுதற்குத துணையான காரியங்கள் சம்பவித்தன.

லய்லாவின் மோதிரத்தை யெடுத்துக்கொண்டு கைரிகர்மான் விடுதி விட்டிவிருந்து போய்விட்டதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அவன் காஸிமையும் மஸூதையும் நிறுத்திவிட்டு வந்த இடத்திற்குத் தாரிதமாய்ச யென்றனன். தான் கோபுரத்துக்கனுப்பிய ஜனங்கள் அலதீனையும் அவரின் ஏவற்காரர்களையும் பிடித்துக்கொண்ட சமாசாரத்தை யவ்விடத்தில் கேள்விப்படுதற்கு கர்மான் காத்திருந்தனன். மேலும் அவன் அங்கு தனது ஜனங்களோடு உதுமானிய மறியற்காரர்களையும் காணுதற்கு நம்பி யிருந்தனன். அவன் மேற்படி இடத்திற் சேர்ந்தவுடன் ஓர் கூடாரத்தில் ஒரு வெளிச்சம் எரிவதைக்கண்டான். அந்தக்கூடாரம் தான் அங்கிருந்து முன் போனபொழுது இருக்கவில்லை. அந்தக்ஷணமே புற்றரையில் சாய்ந்துகொண்டிருந்த காஸிமும் மஸூதும் எழுந்து நின்றார்கள். அவர்களிடம் "என்ன செய்தி?" என்று கள்ளர்களின் தலைவன் விசாரித்தனன்.

காஸி "கெட்ட சமாசாரத்தைத் தெரிவித்தற்குத் துக்கப்படுகின்றேன்" என்றான்.

கர்மான் "நாசம். பின்னை எனது சந்தேகங்கள் நிறைவேறின. ஆகிலும் அந்தச சமாசாரமென்ன? எங்களுடைய மனிதர்களெங்கே. அவர்கள் வந்தார்களா? மிர்ராவைப்பற்றிய செய்தி யென்ன?" என்று கூறினன்.

காஸி "மிர்ரா பெருமாட்டி பாதுகாப்போடு அந்தக் கூடாரத்தி லிருக்கின்றார். உதுமானியர்களோ திரும்பவும் தப்பிவிட்டார்கள்" என்று மறுமொழி கொடுத்தனள்.

கைரி கர்மான் "திரும்பவும் தப்பிவிட்டார்களா? பத்தர்களினை நாஙகள் எங்களின் முயற்சிகளில் புத்தியற்ற மடையர்களானோம். ஆகிலும் நானப்படியல்ல. நான் மாத்திரமே ஜயமடைகின்றேன்" என்று மொழிந்தனன்.

காஸி "ஆ! பெருந் தலைவரே நீங்கள் ஜயமடைந்தீர்களா? அது வொரு காரியமே" என்றான்.

கைரிகர்மான் "ஆம். அது வொரு காரியந்தான். ஆகிலும் அது செய்யவேண்டிய காரியத்தில் அரைவாசி. ஜனஙகளெங்கே. அவர்கள் கொஞ்சநேரத்தில் லய்லாவையும் அவளின் வேலைக்காரப் பெண்களையும் வழி மறைத்துப் பிடிப்பதற்குத் தேவைப்படுவார்கள்" என்று உத்தரங் கூறினன்.

அந்தக்ஷணமே கூடாரத்தின் திரை நீக்கப்பட்டு மிர்ரா வெளியே வந்து "எனது சிறப்பான புருடரே" என்று மொழிந்தவளாய் கைரிகர்மானின் கரங்களில் சாய்ந்தனள்.

கைரிகர்மான் "எனது சவுந்தரியமான மிர்ராவே, எனது அன்புள்ள மனைவியே" என்று சத்தமிட்டவனாய் அவளைத் தனது மார்போடணைத்து அப்பொழுதடைந்த ஆவேசமான ஆநந்தத்தில் தனது துராலோசனைகளையும் தந்திரங்களையும கொஞ்சநேரம் மறந்தனன்.

அந்தக்குணம் மாறியவுடன் மிர்ரா "காஸிமைக் குறை கூறவேண்டாம். அவன் தன்னாற் கூடியதைச் செய்தான். நான் என்னாற் கூடியதைச் செய்தேன். ஆகிலும அந்த உதுமானியனின் ஏவற்காரர்கள் சந்தேகித்தார்கள். ஆதலால் எல்லாம தவறிவிட்டது" என்று கூறினன்.

கைரிகர்மான் தனது மனைவியைத தன் கரத்தில் தாங்கிக்கொண்டு கூடாரத்திற்குள் நுழைந்தான். அலீனின் வேலைக்காரப் பெண்கள் வேறோர் கூடாரத்திலிருந்தார்களாதலின் கைரிகர்மானும் மிர்ராவும் தனித்திருந்து சமபாஷிக்கத் துவங்கினார்கள்.

"எனது மிர்ராவே நடந்த காரியங்களை யெல்லாம் என்னிடம் இப்பொழுது சொல்லு" என்று கள்ளர்களின் தலைவன் கேட்டனன்.

அப்படியே அவள் தனக்கும் அலதீனுக்கு மிடையில் நடந்த காரியங்களைத் தெரிவித்தனள். தனது கைகளையும் கால்களையும சேர்த்து ஹாபிஸ் கட்டிய செய்தியை யவள் சொல்லும்பொழுது கைரிகர்மான் கோபங்கொண்டு ஹாபிஸை "ஓர் உதுமானியனின் நாய்" என்று கண்டித்துப் பேசினன். கைரிகர்மானல் அனுப்பப்பட்ட ஆட்கள் வந்தபிறகே தான் சிறையிலிருந்து மீட்கப்பட்டதாய் மிர்ரா தெரிவித்தனள். உதுமானியர் கோபுரத்தின் வாயிலைத் திறந்துவைத்ததால் தான் கரிலாக் கூட்டத்தை யனுப்பித் தப்பியோடிய உதுமானியர்களைத் தேடும்படி கற்பித்ததாய் மிர்ரா அறிவித்தனள். அந்த மனிதர்கள் இன்னும் திரும்பவில்லை. தான் ஒரு மணித்தியாலமாய் லேபாவோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததால் தான் தனது புருடனோடு சேருதற்குப் புறப்படமுன் கயிலயால் மிகத் துன்பப்பட்டதாக அறிவித்தனள்.

உதுமானியருக் கெதிராய் எடுக்கப்பட்ட முயற்சிகள் அபஜயப்பட்டதற்காய் கைரிகர்மான் மெத்தக கோபங்கொண்டனன். ஆகிலும் அவனுடைய ஆட்கள் அவர்களைப் பிடித்துக்கொள்வார்களென்ற நம்பிக்கை அவனுக்குண்டாயிருந்தது.

"அன்புள்ள மிர்ராவே, உனது இனத்தவர்களின் வீட்டிக்குப் போயிருக்கையில் உன்னை யழைத்தும, நான் செய்யப்போகிற காரியத்தைத் தெரிவித்தும், அதில் நீ செய்யவேண்டிய வேலையை யறிவித்தும் நானெழுதிய கடிதத்தை நீ விளங்கிக்கொண்டாயா" என்று கைரிகர்மான் வினவினன்.

"எனது சிறப்பான கைரியே, நான் எல்லா விபரங்களையும் அறிந்துகொண்டேன். ஆனல் லய்லாவைக்குறித்தெப்படி" என்று மிர்ரா கூறினள்.

"இதோ அவளின் மோதிரமிருக்கிறது. நான் கையிடுகின்ற காரியத்தில் ஜயமடைகின்றேன்" என்று கைரிகர்மான் மொழிந்தனன். மேலும் அவன் தான் அப்பொழுது அணிந்திருந்த உடையோடு ஹோட்டலுக்குச் சென்று அங்கு செய்த காரியங்களைச் சொல்லவே "ஆ! எனது அன்பான புருஷனே இவ்வித துணிவோடு பட்டணத்திற்குச் செல்லலாமா? அங்கு ஆராவது கண்டு கொண்டால் தீங்கு நேரிடுமே" என்று மிர்ரா சத்தமிட்டனள்.

இதைக்கேட்ட கைரிகாமான் "அன்புள்ளவளே, அச்சங்கொள்ள இடங்கொடாதே. நான் இந்தத் துணிவான காரியத்தைச் செய்தது நானிப்பொழுது எடுத்திருக்கின்ற முயற்சிக்கு வேண்டியதாயிருக்கின்றது. மிர்ராவே நான் எச்சரிக்கையோடு நடந்தேன். தேவைக்கதிகமாய் நான் லய்லாவின் அறையில் தங்கவில்லை. அவளணிந்திருந்த மற்றும் இரத்தினங்களையாவது மேசையிலிருந்த ஏராளமான இரத்தினங்களையாவது நான் எடுக்கவில்லை. மேலும் இரவில் பாதுகாப்பின்றி உறங்குகின்ற பெண்களின் அறைக்குட் சென்றபொழுது அப்பக்கத்துள்ள கள்ளர்கள் பதுங்கிச் செய்கின்ற காரியத்தை நான் இகழ்ந்து தள்ளுகின்றேன். அதற்குத் தக்க விதமாய் ஆயுதங்களணிந்து கொண்டு பகிரங்கமாய்ச் செல்லுகின்ற வழிப்போக்கர்களை வீரியத்தோடு தாக்கி அவர்களின் பொருட்களைக் கொள்ளையெடுக்கிறதற்கும் இடையில் வித்தியாசமிருக்கிறது" என்று கூறினன்.

அப்பொழுது மிர்ரா "ஆம், ஆம், எனது சிறப்பான புருடரே. உம்முடைய தொழிலிலும் வீரியமும் தைரியமும் இருக்கவேண்டும்" என்றாள்.

இவ்வாறு இருவரும் தந் தம் கருத்துக்களை யுயர்த்திப் பேசிக்கொண்டிருக்கையில் கைரிகர்மான் "மிர்ராவே, நாங்கள் தலையிட்டிருக்கிற காரியத்தின் பூர்வ வொழுங்குகளில் அரைவாசி லய்லாவின் மோதிரம் எங்கள் வசமானதோடு முடிந்தன. நீ காலமே திப்லிசுக்குப்போ. உன்னைத் தூனூர் சந்திப்பான். அலீன் அங்கு வந்திருந்தால் அதை யுனக்கு தூனூர் அறிவிப்பான். அப்படி அலீன் வந்திருப்பின் நீ யொன்றும் செய்யாதும் தாமதிக்காமலும் எங்கள் மலைவீட்டுக்குத் திரும்பிவிடு. அலீன் அங்கில்லாதிருந்தால் அவர் பிடிக்கப்பட்டாரென்று நம்பிக்கொள். மேலும் நான் எனது பிரதான கருத்தைப் பூரணமாய் நிறைவேற்றுதற்கு அப்பட்டணத்திற்குச் சீக்கிரம் வந்து வுன்னோடு சேருவேனென்பதை யறிந்துகொள்" என்று கூறினான்.

லய்லாவைப்பற்றி யெப்படி யென்று மிர்ரா விசாரித்தனள்.

"எங்களுடைய ஆட்கள் இன்னும் சில மணித்தியாலங்களில் வாராதிருக்கில் நான் காஸியோடும் மஸூதோடும் போய் லய்லாவையும் அவளின் கண்ணிப்பெண்களையும் கைதிகளாகக்கொள்ள வேண்டும். ஒருவேளை யவள் தனது மோதிரம் காணமற்போனதை யறிந்தவுடன் இனிமேல் தான் திப்லிசுக்குப் போவதில் பலனில்லையென்றெண்ணி மிங்கிரேலியாவுக்குத் திரும்பிவிடுவாள். அவள் அப்படிச்செய்தால் எங்கள் காரியம் ஒரு அளவுக்கு ஜயமாகும். நாங்கள் அதற்கப்பால் அவளை இடஞ்சற்படுத

தவும் வேண்டியதில்லை" என்று கைரிகர்மான் விடைகொடுத்தனன்.

"பின் சொல்லப்பட்டவாறே காரியம் நடக்குமென்று நான் நம்புகின்றேன். எனது மேன்மையான புருடரே இந்த முயற்சியில் நாங்கள் ஜயமடைந்தால் எங்களுக்குக் கிடைக்கின்ற பலனென்ன?" என்று மிர்ரா கடாவினள்.

"ஆ! அப்பொழுது மிர்ராவே நான் இலவிதமான ஆறுதலின்மையும் ஆபததுமுள்ள ஒவியத்திலிருக்க நேரிடாது. நாங்கள் ஓர் தூரமான பட்டணத்திற்குச் சென்று எங்களின் பூர்வகாரியங்கள் அறியப்படாத வோரிடத்தில் குடியிருந்து எங்களின் அளவிறந்த ஆஸதியை யனுபவிப்போம். அல்லது நாங்கள் சிறப்புள்ள குவிஸ்தான் பள்ளததாக்கிற்கே போய்விடுவோம். அதற்குச் செல்லும் வழியை நாங்கள் சீக்கிரம் அறிவோம். அந்த ரோஸா புஸ்பங்களின் பள்ளத்தாக்கில அருமையும சமாதானமும் பூரணமுமே இருக்கின்றன. அங்கு எப்பொழுதும வேனிற்காலமே யுண்டு. குளிர்காலம் அங்கு கிடையாது. அந்த இன்பமுள்ள தனிமையான விடத்திற்குக் காற்று மழைவருகிறதற கிடமில்லை" என்று கைரிகர்மான் கூறினன்.

"ஆ! அதுவே மெய்யான இன்பம். கைரியே நான் அங்கு போகிறதையே விரும்புகின்றேன். ஆ! உலகத்திலுள்ள அந்த சுவர்க்கத்தில் உலாவுகிறது எவ்வளவு ஆநந்தமான காரியம. அதன் கனிகளைப் புசிப்பதும், குவிஸ்தானின் படிகம்போன்ற ஜலததைக் குடிப்பதும், எங்கள் முற்பிதாக்களான ஆதமும ஹவ்வாவும நடந்த வழிகளில் நடக்கிறதும் எவ்வளவு சந்தோஷமான காரியம்" என்று மிர்ரா பகர்ந்தனள்.

"அப்படி மிர்ராவே, நாங்கள் ரோஸா புஷ்பங்களின் பள்ளத்தாக்கான குவிஸ்தானில் குடியிருந்தால் நாங்களங்கு கண்டெடுக்கிற அளவிறந்த ஆஸ்தியால் யாது பிரயோசன முண்டாகுமென்று எனக்குத் தோன்றவில்லை" என்று கர்மான் மொழிந்தனன்.

இதைககேட்ட மிர்ரா "ஆ! நான் இன்னும் எனது பேச்சை முடிக்கவில்லை. கொஞ்சககால அநுபோகததின் பின் எவ்வித இன்பமும் தெவிட்டிவிடுவது மனுஷ இயற்கை. ஆகையால் எனது மேன்மையுள்ள புருடரே நாங்கள் ஜயமடைந்தால் எங்களுக்குச் செலவத்தைத் தருகின்ற பள்ளத்தாக்கில் கொஞ்சககாலமும், அந்த செல்வத்தைக் கொண்டு பல இன்பங்களை யனுபவிக்கக்கூடிய வோர் பட்டணத்தில் கொஞ்சங் காலமும் கழிப்போம்" என்று விடைபகர்ந்தனள்.

இவ்வாறு சிறு பிள்ளைகளைப போலவே கைரி கர்மானும அவனின் மனைவியும சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் தாஙகள் குறித்த செல்வத்தைப் பெற்றுக் கொள்ளுதற்குத் தவறிவிட மாட்டார்களென்ற விசுவாசம் அவர்களிடம் இருந்தது. அலதீன் கடைசியாய்த் தப்பிவிடலாமென்ற எண்ணத்தைத் தானும் கொள்ளுதற்கு கைரிகர்மானுல கூடியதாயிருக்கவில்லை. அலதீன் துவக்கத்தில் கைரி கர்மானின் ஆட்களை ஜயித்துக்கொண்டாலும் இரண்டாமுறை ஜயிக்கமாட்டாரென்று அவன் நிச்சயித்தனன்.

ஒருநாள் காலையில கைரி கர்மானும மிர்ராவும் ஒருவரை விட்

டொருவர் திரும்பவும் பிரிந்தார்கள். மிர்ரா தனது இருவேலைக்காரப் பெண்களோடு போய்ச் சொற்ப நேரத்தின்பின் கள்ளர்களின் தலைவனான கைரி கர்மான் மூன்று உதுமானியர்களையும் பிடிப்பதற்காய் அனுப்பப்பட்ட ஆட்கள் திரும்பிவராத நிமித்தம காஸியையும் மஸ்ஊதையும் தன்னோடு கூட்டிக்கொண்டு குதிரைமீதேறிக்கொண்டு சுற்றுவழியாய்ச் சென்று இரவில் லய்லா தங்கியிருந்ததும் அவளின் மோதிரத்தை கைரி கர்மான் களவெடுத்ததுமான பட்டணத்திற் கப்பாற் சென்று லய்லாவும் அவளின் கன்னிப்பெண்களும் திப்லிஸுக்குச் செல்லுகிற வழியில் ஓர் இடத்தில் மறைந்திருந்தான். மோதிரம் களவெடுக்கப்பட்டதையும் கைரி கர்மான் விடுதி வீட்டில் இரவு தங்கினதும் அறியப்பட்டவுடன் லய்லா தக்க காவலோடு பிரயாணஞ்செய்வாளென்ற நிச்சயம் கைரி கர்மானிலுண்டாயிருந்தாலும் அது அவ்வளவு பெரியகாவலாயிருக்குமென்று அவன் நம்பியிருக்கவில்லை. ஆதலால் லய்லாவும் அவளின் இரு பெண்களும் குதிரைகள் மீது வருவதையும் அவர்களுக்குக் காவலாய் ஆயுதமணிந்த பன்னிரண்டு தத்துவமுள்ள ஆண்கள் வருவதையும் கைரி சர்மான் தனது ஒளிப்பிடத்திலிருந்து கண்டபொழுது மிக்க வீரியமுள்ள அவன் தானும் மேற்படி காவலைத்தாக்குதற்கு அச்சங்கொண்டனன். மஸ்ஊது தக்க வேவுகாரனேயன்றி யுத்தஞ்செய்ய தக்கவனல்ல. ஆதலின் லய்லாவின் கூட்டம் தாக்கப்பட்டதானால் கைரி கர்மானும் காஸியுமே சண்டை முனையைத் தாங்க வேண்டியவர்களாயிருந்தார்கள். இந்நியாயத்தாலேயே லய்லாவும் அவளின் கன்னிப்பெண்களும் இடைஞ்சலின்றிப் போகிறதற்கு விடங் கொடுக்கப்பட்டார்கள்.

இதனால் கைரி கர்மானின் நம்பிக்கை கெடுக்கப்பட்டது. ஏனென்றால் லய்லா திப்லிசுக்குப் போய்விட்டால் அலதின் பிடிக்கப்பட்டாலும் மிர்ரா தனக்குச் சாட்டப்பட்ட வேலையை திப்லிஸில் நிறைவேற்றிக்கொள்ள மாட்டாளென்று கைரி கர்மானுக்குத் தோன்றிற்று. அப்பொழுது அவன் விடுதிவீட்டிலிருந்து தான் வெளிப்படும்பொழுது தன்னைக் கண்டுகொண்ட இமரீஷியன் வர்த்தகனை யகது அங்கேசரத்திற கொண்டுவந்த நிற்பாக்கியத்தை சபித்தனன். தான் காணப்பட்டதே லய்லா அவ்விதமான காவலோடு போகிறதற்குக் காரணமென்று கைரிகாமான சரியாகவே வுத்தேசித்தனன். ஆகிலும் அடுத்த அஞ்சலில் லய்லா மேற்படி காவலர்களை விட்டுவிடுவாளென்ற எண்ணம் அவனிற் றோன்றவில்லை. அவன் கொஞ்சநேரம் யாது செயயவென்று அறியாதவனாயிருந்தனன். ஆகிலும் சடுதியாய் அவனுக்கோர் கருத்துத் தோன்றிற்று. "நான் நேரே திப்லிசுக்குப்போய் அங்கு வேறு யாருஞ் செல்லமுன் தூனுரோடு பேசிக்கொண்டாலென்ன? அப்படிச்செய்தால் லய்லாவை யெப்படியாவது போக்கிவிடலாம். அலதீன் எனது ஆட்களைத் தப்பி அங்கு போனால் அவனையும் அப்படியே செய்துவிடலாம். ஆம் இப்படியே நான் செய்வது நலம்" என்று கைரி கர்மான் எண்ணினன்.

இவ்வாறு கைரிகர்மான் தன்னில் உத்தேசித்துக்கொண்டு திரும்பவும் தனது வுடையை மா

ற்றிக்கொண்டு காஸிக்கும் மஸூதுக்கும் சில கட்டளைகளைக் கொடுத்துவிட்டு திப்லிசுக்குப் பிரயாணமானான். ஆகிலும் அவன் நெடும் வழியாற் போகாதபடியால் அவன் லய்லாவையாவது மூன்று உதுமானியர்களையாவது சந்திக்கவில்லை.

மிர்ரா தனது வேலைக்காரப் பெண்களோடு திப்லிசுக்குப்போனதாய்ச் சொன்னோமல்லவா? அவர்களும் நெடும்வழியாற் போனால் அலதீனைச் சந்திக்க வேண்டியதாய் வருமென்றஞ்சிக் குறுக்கு வழியாற் சென்றார்கள். இடைக்கிடை சில விடங்களில் தங்கித் தளைபாறிக்கொண்டு போய்ப் பின்னேரம் ஓர் கிராமத்திலிருந்த விடுதிவீட்டில் தங்கினார்கள். இந்த இரவிலேயே லய்லாவும் அவளின் வேலைக்காரப் பெண்களும் ஜோராஜியமாவின் வீட்டில் தங்கி நாம் முன் சொன்னபடி அப்பெண்ணுக்குச் சம்பவித்த துக்க சமாசாரத்தைக் கேள்விப்பட்டார்கள். அடுத்தநாள் மிர்ரா திப்லிசுக்குப் பிரயாணமாகும்பொழுது தனது புருடனும் அப்பட்டணத்திற்கே போகின்றானென்பதைக் கனவிலும் நினைக்கவில்லை. ஆகிலும் அவள் லய்லாவையும் அவளின் ஏவற்காரர்களையும் கைரிகர்மான் பிடித்திருப்பானென்றும் அலதீன் அவரைப் பின்றொடர்ந்து சென்று கூட்டத்தால் பிடிக்கப்பட்டிருப்பானென்றும் நம்பி இருந்தனள். அப்படி அவர்கள் பிடிக்கப்படிராதவரையில் தனது பிரயாணம் சித்தியாகாதென்று அவளெண்ணினாள்.

கொஞ்சதூரம் போனபிறகு முன் தான் அலதீனைச் சந்தித்த விடத்தைப்போன்றவொரு தானத்தை மிர்ரா கண்டனள். அங்கு சற்றுநேரம் தங்குதற்கு அவளும் அவளின் ஏவற்காரர்களும் ஆயத்தமானார்கள். அங்கேவோர் ஆறு வோடிக்கொண்டிருந்தது. அதற்கருகே மிர்ரா புற்றரையில் சாய்ந்துகொண்டிருந்து தான் பக்தியோடு நேசிக்கின்ற புருஷனையும், அவனுக்காய்த் தான் தென் ஜோர்ஜியாவிலுள்ள தனது சங்கையான வீட்டை விட்டுப்போட்டதையும், தான் விவாகமுடித்திருப்பது பயங்கரமான கைரிகர்மானையென்று சந்தேகமாவது தன்னுறவினருக்கில்லாதிருப்பதையும் அவள் எண்ணினாள். பின்பு அவள் தற்போது தானும் தனது புருஷனும் கையிட்டிருக்கும் விஷயத்தையும் அது அநுகூலப்படுதற்கும் அநுகூலப்படாதிருத்தற்குமுள்ள வழிகளையும் ஆலோசித்தனள்.

அவள் இரண்டு மணித்தியாலம் அப்படிச் சாய்ந்துகொண்டிருந்துவிட்டுத் திரும்பப் பிரயாணமாக நின்றபொழுது குதிரைகளின் அடிச்சத்தத்தைக் கேட்டனள். அவள் எழுந்து தன்னை மரங்களுக்கிடையில் மறைத்துக்கொண்டனள். ஆர் வருகிறார்களென்று அவள் அவ்வாறொளித்திருந்து பார்த்தது ஆச்சரியமல்லவென்று வாசிப்பவர்கள் அறிந்துகொள்வார்கள். ஏனென்றால் அவள் முன் சந்தித்த மூன்று உதுமானியர்களையும் திரும்பச் சந்திக்கத் விரும்பவில்லை.

ஆனால் குதிரையில் வருபவர்கள் மூன்று பெண்களென்பதை அவள் கண்டவுடன் அவள் தானொளித்திருந்த விடத்திலிருந்து வெளிப்பட்டனள். அவள் அப்பெண்களின் முகங்களைக் காணவில்லை. அவர்கள் உஷ்ணத்திற்காய் முகமூடி யிட்டிருந்தார்கள். ஆகி

ஆம் அவர்களுக்கு நடுமே வந்த பெண்ணின் உருவாலங்காரத்தைக் கண்டதிஜயித்தனள். மிர்ராவின் மனதில் சந்தேகம் பிறந்தது. "இவள் மிக்கிரேஸியாவின் நட்சத்திரமான லய்லாவாயிருக்கலாமா? அவள் கைரிகர்மானின் பார்வையைத் தப்பிவிட்டாளா? அவளை விக்கினம மிர்ராவின் வழியில் கொண்டுவருகின்றதா? என்று மிர்ரா தம்முள் எண்ணினான்.

ஆம்! லய்லாவே தனது கன்னிப்பெண்களோடு அங்கு போனாள். மிர்ரா வேண்டுமென்று எடுத்த சுற்று வழியும் லய்லா ஆமினியினுடைய வீட்டுக்குப் போகும் ஓடிய வழியும் மேற்படி தானத்திற்கு அவர்களிருவரையும் கொண்டுவந்தன. லய்லா தன் முன்னே யோர் சவுந்தரியமுள்ள பெண் நிற்பதைக் கண்டு தனது முகமூடியை யுயர்த்தினள். அவளின் வதனத்தின் அழகைக்கொண்டும் முன் கைரிகர்மானிடம் தானறிந்திருந்த விவரத்தைக்கொண்டும் தான் கண்டது மிக்கிரேஸியாவின் நட்சத்திரமான லய்லாவேயென்று மிர்ரா அப்பச் சந்தேகமுமின்றி நம்பினள். "ஆ! நீ எவ்வித விக்கினத்தாலோ எனது மேன்மையான புருஷனைத் தப்பிக்கொண்டாய். ஆகிலும் நான் இப்பொழுது உன்னைச் சந்தித்தது அதிஷ்டமே" என்று மிர்ரா தம்முள் சொல்லிக்கொண்டனள்.

மிர்ரா இன்னுமொரு நிமிஷத்தில் முன்னேவந்து லய்லாவை மரியாதையோடு சந்தித்துப்பேசினாள். ஆகிலும் அப்பொழுது அவளுடைய மனதில் உற்பத்தியாகிக்கொண்டிருந்த துரோகமான கருத்துகளை லய்லா கொஞ்சமாவது சந்தேகிக்கவில்லை. லய்லாவும் அவளின் கன்னிப்பெண்களும் ஜோர்ஜியமாதின் வீட்டிலிருந்து புறப்பட்டபொழுது தாங்கள் சந்திக்கிறதற் பட்டணத்தில அல்லது கிராமத்தில ஓர் வழித்துணை பெற்றுக்கொள்ளுகின்றதாயிருந்தது வாசிப்பவர்களின் ஞாபகத்திலிருக்கும். ஆனால் அவர்கள் தங்களுக்கு ஜோர்ஜியமாது காட்டிய வழியைத் தப்பவிட்டதால் அவர்கள் பட்டணத்தையாவது கிராமத்தையாவது சந்திக்கவில்லை. அவர்களும அவர்களின் குதிரைகளும களைத்து தீன் வேண்டியவைகளாயிருந்தன. ஆதலால் அவர்கள் தங்குதற்கு ஏதாவது தானத்தைத் தேடும்பொழுதே அவர்கள் ஆற்றோரத்தில் மிர்ராவைச் சந்தித்தார்கள். உடனே அவர்கள் குதிரைகளிலிருந்து இறங்கி தங்களைப் போன்ற பெண்களின் நேசத்தைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு கிடைத்த தருணத்தைக் கொண்டு பலனடைந்தார்கள். லய்லாவின் கன்னிப்பெண்களான ஸய்தாவும் ஆமினாவும் மிர்ராவின் ஏவற்காரப்பெண்களோடு மரங்களின் நிழலிலிருக்க லய்லா ஆற்றோரத்தில மிர்ராவுக்கருகே உட்கார்ந்தனள்.

ஆ! லய்லாவே, கொஞ்சதூரத்தில் புல்லில் மெள்ள பதுங்கி வருகின்றதும் இடைக்கிடை நின்று அவ்விரு அழகிய பெண்களுள் ஆரைத் தீண்டலாமென்று எண்ணுகின்றதுமான விஷமுள்ள கறுப்புப் பாம்பைப்போலவே நீ தோழியாய்க் கொள்ளுகின்ற அந்த அலங்காரமான பெண்ணும் கபடமுள்ளவளென்பதை நீ யற்பமேனும எண்ணவில்லை.

இன்னும் வரும்.

## ஸஹீஹ் புகாரீ.

கனம். முகியத்தீன் சாகிபு அகமது லெவ்வை ஆலிம் சாகிபு அவர்களால் “முஸ்லிம் பாதுகாவல”னுக்காய் விசேஷமாய் மொழி பெயர்க்கப்பட்டது.

[தொடர்ச்சி.]

நபி சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் எங்களைப்பார்த்து நீங்கள் திரும்ப உங்களது மனைவி மக்களிடம் போய் அவர்களைப் படிப்பூட்டுங்கள் என்று திருவுளம்பற்றியதாக மாலிக்கிபுனுல் ஹுவைரிது தெரிவித்தார்.

அபீஜம்றாவைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அவர் சொல்கிறார் இபுனு அப்பாஸ் அவர்கட்கும் சில மனிதர்கட்கு மிடையே நான் துவிபாஷகனாயிருந்த போது குறித்த இபுனு அப்பாஸ் சொன்னார்கள். அப்துல்கைஸின் வருகையாளர் நபிநாயகமவர்களிடத்திற்கு வரவே நீங்கள் எந்தக்கூட்டத்தில் உள்ளவர்களென்று நாயகம் அவர்களை வினவ அதற்கு நாங்களோர் றபீஆவென்று சொன்னார்கள். அப்போது பழிப்பும் சலிப்புமற்ற கூட்டத்தவர்கட்குச் சங்கோசம் என்று நபிநாயகம் கூறினர். பின்னர் அக்கூட்டத்தவர்கள் நாயகமவர்களைப் பார்த்து அல்லாவுடைய றசூலே நாங்களோ தூரதிசையிலிருந்து வருகிறோம், எங்கட்கும் உங்கட்குமிடையே “முளா”வம் சக்காபிர்களுள் ஒரு கூட்டத்தார் இருக்கின்றார்கள் ஆகலின், சங்கையான மாசங்களிலேயல்லாது உங்களிடத்திற்கு வருதல் எங்கட்குக் கூடாதிருக்கின்றது. ஆதல்பற்றி, நாங்கள் நடத்தவேண்டிய கடமைகளை யெங்கட்குத் தெரிவியுங்கள் எங்களோடொத்த மற்றயவர்கட்கும் அவற்றைப்போய்த் தெரிவித்து அதன் வழியே நடந்து நாங்கள் மோட்சபதியடைவோமாக வென்று கேட்டுநின்றார்கள்.

அதற்கு, நாயகமவர்கள் நாலு கருமத்தை யவர்கட்குச் செய்யும்படி ஏவியும், நாலு கருமத்தைத் தவிழும்படி விலக்கியும் விட்டார்கள். அவர்கட்குச் செய்யும்படி ஏவிய நான்கு கருமங்களுமாவன, ஏகவல்லபனான அல்லாவை விசுவாசித்தல் என்று சொல்லி அவ்விசுவாசம் எவ்வாறென்று நீங்களறிவீர்களா? என்று நாயகம் கேட்க அல்லாவும் அவனுடைய றசூலும் மிக்க அறிந்தவர்களென்று அவர்கள் சொன்னார்கள். அப்போது அல்லாவைத்தவிர நாயனில்லை முகம்மதாகிறவர்கள் அல்லாவின் திருத்தூதர் என்று சாட்சிபகர்தல், தரிபாடாய்த் தொழுதல், றமளான்மாசம் நோன்புவைத்தல், கொள்ளைமுதலில் ஐந்திலொருபங்கை பைத்துல்மாலுக்குச் சேர்த்தல் ஆகியவைகளையாம். அவர்கட்கு விலக்கப்பட்ட நான்கு கருமங்களாவன சராய மட்குடம், மட்பானை, மரப்பானை, சுரக்காய்க்குடம், ஆகியவைகளையாம் என்று சொல்லி இவற்றை விட்டகன்று கொள்ளுங்கள். உங்களோடொத்த மற்றையவர்கட்கும் இவைகளைப்போய்த் தெரிவியுங்கள் என்றுஞ் சொன்னார்கள்.

அக்கபத்திபுனுல் ஹாரிதைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அவர்கள் அபீஹாபியிபுனு அஸீஸின் மகளை விவாகம்பண்ணியிருக்குங்காலத்தில் ஒரு பெண்ணானவள் அவரிடத்திற்கு வந்து அக்க

பாவே? உமக்கும், நீர் விவாகம் பண்ணியிருக்கின்ற பெண்ணுக்கும், நிச்சயமாய் நான் பால் கொடுத்திருக்கின்றேனெனச் சொன்னாள். இவ்வாறு அவள் சொல்லவே எனக்கு நீ பால் தந்திருப்பதை நான் அறியமாட்டேன். அதைப்பற்றி நீ எனக்கு ஏற்கனவே தெரிவிக்கவுமில்லையென்று அக்கபா சொல்லி, மதீனாவுக்கு நபிநாயகமவர்களை நாடி வாகனத்தின்மீதேறிச் சென்று இது விஷயத்தைப்பற்றி அவர்கட்குத் தெரிவித்தார். அதற்கு றசூலுல்லா சொன்னதாவது நீரும் தம்போது நீர் விவாகம் செய்திருக்கின்ற பெண்ணும் ஒரு இஸ்திரீ இடத்தில் பால் குடித்திருப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கின்ற தாதலின் உங்களிருவருக்கிடையும் நடைபெற்றிருக்கும் விவாகம் எங்ஙனம் நிறைவுறும். அது நிறைவுறாதென்பதேயாம்.

அதன்பிறகு அக்கபா வென்பவர் அப்பெண்ணை விட்டுப்பிரிந்தனர், அந்தப் பெண்ணானவள் வேறோர் புருஷனை விவாகம் பண்ணிக்கொண்டாள்.

உமறைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அவர்கள் சொன்னார்கள் மதீனா மேல்நாட்டில் வசிக்கும் பனீ உமய்யா வம்சத்திலுள்ள ஓர் அசல் பாகத்தார் எமக்கிருந்தார். நான் றசூலுள்ள விடத்திற்கு ஒருநாளும் அவர் மறுநாளுமாய்ப்போய் அங்கு நடைபெறும் வஹீ முதலானவைகளின் சமாசாரத்தைக் கொண்டுவருதலை வழக்கமாய்க் கொண்டிருந்தோம். ஒருபோது அவருடைய தினத்தில் எனது வாசற் கதவை மிகக் கடினமாய்த் தட்டி யென்னை யழைத்தார். நான் பயந்து திடுக்கிட்டு வெளியேவர மிகப்பாரதூரமான சம்பவம் ஒன்று அங்கு நடைபெற்றதெனச் சொன்னார். உடனே நான் வெளிக்கிட்டு அங்கு சென்று ஹப்ஸாவினிடத்திற்குப் போய் அவர்களைப்பார்க்க அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது. றசூலுல்லா உங்களை "தலாக்கு" என்னும் விவாக விடுதலை செய்துவிட்டார்களா? என்று வினவினன். அதற்கு நானொ அப்படியான காரியம் ஒன்றையும் அறியேன் என்று ஹப்ஸா சொன்னார்கள். பின்பு நான் றசூலுல்லா விடத்திற்குச் சென்று அல்லாவுடைய றசூலே தங்களது மனைவிகளைத் தலாக்குச் சொல்லிவிட்டீர்களா? என்று கேட்டேன். இல்லை நான் அப்படிச்செய்யவில்லை யென்று நாயகம் பகர்ந்தார்கள். அப்போது நான் அல்லா மிகப் பெரியவன் என்று கருத்தமைந்த "அல்லாகு அக்பர்" என்னும் வசனத்தைச் சொன்னேன் என்றார்.

அபீமஸ்ஊதுல் அன்ஸாரியைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது ஒரு மனிதன் றசூலுல்லா அவர்களிடத்தில் வந்து அல்லாவுடைய றசூலே இன்ன மனிதன் தொழுகையை நீட்டித் தொழுவிக்கின்றானாதலின், அவனைத் தொடர்ந்து தொழுவதாம் என்றால் கூடாமலிருக்கின்றதெனச் சொன்னார். அந்த மனிதன் அவ்வாறு நாயகமவர்களிடத்தில் சொல்லவே அங்ஙனந் தொழுவித்தல் அவர்கட்குக் கடுங்கோபமுற்றியதாதலால் அன்றையவிட நாயகமவர்கள் மிகக்கோபத்தோடு "வஉளு" சொல்ல அவர்களை நான் காணவே இல்லையென்று அபூமஸ்ஊதுல் அன்ஸாரிசொல்லிச் சொல்கிறார் மனிதர்களே! நீங்கள் வெறுப்பைக் கொடுக்கின்றீர்கள். மனிதர்களைத் தொழுவிப்பவன்

இலைசாக்கிவைக்கவும் ஏனெனில் அவர்களுள் நோயாளி, பெலவீனர்கள் அலுவலுடையவர், முதலானவர்கள் இருப்பார்கள் என்று திருவுளம் பற்றினார்கள்.

ஸெய்திபுனு காலி துல்ஜுஹ்னியைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது நபிநாயகமவர்களிடத்தில் புகங்கிய ஒன்றைப்பற்றி ஒரு மனிதன் கேட்டபோது ஒருவருடத்துக்கு அதைத் தெரிவியும் பின்னர் அதைக்கொண்டு சுகம் பெறும் அதையுடையவன் வந்தபோது அவனுக்கு அதைக் கொடுத்துவிடும் என்று பகர்ந்தார்கள். வழி தப்பிப்போன ஒட்டகையைப்பற்றிக் கேட்டபோது, நாயகமவர்களின் முகம் சிவந்து கோபமுற்று அதைப்பற்றி உமக்கென்ன? அதற்கு வாயிருக்கின்றது, காலிருக்கின்றது, தண்ணீரிடத்திற்கு வந்து தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும், மரங்களின் இலைகளைப் புசித்துப் பசியை ஆற்றிக்கொள்ளும், ஆதலால் அதனுடையவன் அதைக் கண்டுபிடிக்கும்பொருட்டு நீர் விட்டுவிடும் என்று பகர்ந்தார்கள். பின்னும் வழி தப்பிப்போன ஆட்டைப்பற்றி கேட்டதற்கு அது உமக்கு அல்லது உமது சகோதரனுக்கு அல்லது உமது ஓநாய்க்கு என்று கோபமாய்ச் சொன்னார்கள்.

அபிமூஸாவைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது நபிநாயகமவர்களிடத்தில் அவர்கட்குப் பொருத்தமற்ற பல கருமங்களைப்பற்றி அடிக்கடி கேட்கப்பட்டபோது அவர்கட்குக் கோபமெழுந்ததின் காரணமாக நீங்கள் விரும்பமுற்றதை இன்னும் கேளுங்கள் இன்னும் கேளுங்கள் என்று அஸ்ஹாபுகளாருக்குச் சொன்னார்கள். அப்போது, அப்துல்லா இபுனு ஹுதாபாவென்பவர் வந்து என்னுடைய தகப்பன் யார் நாயகமே என்று கேட்டார், உம்முடைய தகப்பன் ஹுதாபாவென்று சொன்னார்கள். இன்னுமொருவர் வந்து என்னுடைய தகப்பன் யார் நாயகமே என்று கேட்டார், உம்முடைய தகப்பன் ஸாலிமுமவுலா செய்பாவென்று சொன்னார்கள். உமறு றலியல்லாகு அன்கு அவர்கள் நபிகள் பெருமானார் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சினக்குறிப்பை அவர்களது திருமுகத்தில் அறிந்தபொழுது கால் மடித்திருந்து அல்லாவை நாயனாகவும், இஸ்லாமை மார்க்கமாகவும், முகம்மதை நபியாகவும், ஏற்றுக்கொண்டோம் அல்லாவுடைய றசூலே என்று சொன்னார்கள். அக்கொடே நாயகமவர்களின் கோபம் தணிந்து ஆறுதலாயிருந்தார்கள்.

நபிநாயகம் திருவுளம்பற்றியதாக அபூபுர்தா தங்கள் தகப்பனைத்தொட்டும் வெளிப்படுத்தி வைத்தார்கள். அதாவது மூன்று பெயர்களாகிறவர்கள் அவர்கட்கு இரண்டு கூலியுண்டு. அவர்களுள் முதலாவதானவன் வேதத்தையுடையவர்களுள் ஒரு மனிதன் அவன் தன்னுடைய நபியைக் கொண்டு ஈமான் கொண்டுமே, முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக்கொண்டு ஈமான் கொண்டுமிருப்பவன். இரண்டாவதானவன் அடிமையாக்கப்பட்டு அல்லாவுடைய கடமையையும், அவனது நாயனுடைய கடமையையும் நிறைவேற்றி வந்தவன். மூன்றாவதானவன் அவனிடத்தில் ஒரு அடிமைப் பெண் இருந்து அவளுக்கு அழகான ஒழுக்கத்தைப் பயிற்றி, அறிவைக் கற்றுக்கொடுத்து, பின்னர் அவளை யுரிமையிட்டு விவாகம் பண்

ணிக்கொண்டவன். ஆகிய இம்மூவர்களுமே இரண்டு கூலிக்குப் பாத்தியப் பட்டவர்களேயாம்.

அபீஹுறைறா றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது, அதாவது, நபிகள் பெருமானார் அவர்களிடத்தில் அல்லாஹ்வுடைய றசூலே! கியாமநாளில் உங்களுடைய சபாஅத்துக்கு மனிதர்களுள் மிக்க பாக்கியப்பட்டவன் யாரென்று கேட்கப்பட்டது. அப்போது றசூலுல்லா அபூஹுறைறாவைப் பார்த்து இந்த ஹதீதைப்பற்றி உம்மைவிட முதலாவதாய் என்னிடத்தில் ஒருவருங்கேட்காமலிருக்க எண்ணியிருந்தேன். ஆகவே இந்த ஹதீதில் உமது பற்றுதலை நான் காணவில்லையென்று நாயகம் கூறி, கியாமநாளில் என்னுடைய சபாஅத்துக்கு மனிதர்களுள் மிக்க பாக்கியப்பட்டவன் அவனுடைய இருதயத்தால் கலப்பற்றதாக (லாயிலாஹ இல்லல்லாஹு) வணங்கப்படத்தக்க நாயன் அல்லாவைத்தவிர இல்லையென்று சொன்னவன் எனத் திருவுளமபற்றினார்கள்.

உமறிபுனுல் அப்துல் அஸீஸ் என்பவர்கள் அபீபக்றிபுனு ஹஸ்மு அவர்கட்கு நிருபமொன்றெழுதினார்கள். அதுவருமாறு: றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்களின் ஹதீதுகளிலிருக்கின்றவைகளையும் கண்டுபார்த்து எழுதிப்போடுங்கள். ஏனெனில் அறிவு தூர்ந்துபோவதையும், உலமாக்கள் காலஞ்சென்றுபோவதையும் நான் பயப்படுகிறேன். நபிநாயகமவர்களின் ஹதீதையே அன்றி யேற்றுக்கொள்ளப்படாது. ஆகவே அவர்கள் அறிவைப் பொதிந்துகொள்ளவும், அறிவற்றவன் அறிந்துகொள்ளும்வரையும் அறிந்தவர்கள் பின்தொடர்ந்து செல்லாது அவர்களது இருப்பிடத்திலேயே இருந்துகொள்ளவும். நிச்சயமாய் அறிவானது அந்தரங்கத்தில விடப்படும்வரையும் அழிந்துபோகாது. அந்தரங்கத்தில அது விடப்பட்டுபோனால் அன்றையிலேயே அது அழிந்துபோகக்காரணமாயிருக்கும். என்பதேயாம.

அப்தில்லா இபுனு அம்றிபுனுல் ஆஸீ அவர்களைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அவர்கள் சொல்கிறார்கள் நபிநாயகமவர்கள் சொல்லக் கேட்டேன். அதாவது, நிச்சயமாய் அல்லாஹுத்தஆலா அவனுடைய அடிமைகளில் அறிவை ஒரேபிடுங்குதலாய்ப் பிடுங்கிவிடமாட்டான். ஆயினும், ஒரு ஆலிமாவது இல்லாதிருக்குமளவையும், உலமாக்களைக் கைப்பற்றிவந்து கொண்டு படிப்படியாய் அறிவை கைப்பற்றிக்கொள்வான். இனி மனிதர்கள் மூடர்களைத் தங்களுக்குத் தலைவராய்க்கொண்டு மார்க்க அறிவுகளைப்பற்றி அவர்களிடங் கேட்பார்கள். அவர்களோ அறிவில்லாமல் தவறான பத்வாச்செய்து அவர்கள் வழிதப்பிப்போவதுமல்லாமல், மற்றையவர்களையும் வழிகெட்டிலாக்குவார்கள்.

அபீஸயீதுல் குதுரி அவர்களைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அதாவது. ஸ்திரீகள் நபிநாயகமவர்களிடத்தில் வந்து அல்லாவுடைய றசூலே ஆடவர்கள் உங்களிடத்தில் நாளடைவில் வந்து அறிவுகளைக்கற்று எங்களுக்கு மேற்போனார்களாதலின் உங்களிடத்தில் நாங்கள் அறிவுகளைக் கேட்டுப் படித்தற்பொருட்டு ஒருநாளை நியோகியுங்கள் என்று நாயகமிடத்தே கேட்டுநின்று

ர்கள். அவ்விஸ்திரீகளது வேண்டுகோளின்நிமித்தமாய் அவர்கட்கு ஓர் நாளை நியமித்துக் குறித்த நாட்களிலே அவர்களை நாயகம் போய்ச் சந்திப்பதாய் வாக்களித்ததுமல்லாமல் சில "வஉளு"களையும் அவர்கட்குப் போதித்து இன்னுஞ் சில கடமைகளையும் அவர்கட்குக் கற்பித்தார்கள். நாயகம் அவ்விஸ்திரீகட்குச் சொன்ன வஉளுகளுள் ஒன்றாவது, ஒரு இஸ்திரீயானவள் அவளது மூன்று பிள்ளைகள் அவளுக்கு முன்னிதாய் "மவுத்தை"க்கொண்டு பிரிந்துபோவதினாலே அவளுக்கது நரகத்துக்கோர் தடையாயிருக்குமே தவிர என்பதையாம். அப்போது அவர்களுள் ஒரு இஸ்திரீயானவள் இரண்டு பிள்ளைகளும் என்றாள். நாயகம் இரண்டு பிள்ளைகளும் அவ்வாறே என்றார்கள். மேற்கூறிய பிள்ளைகள் பக்குவ வயதை யடையாதவர்களாயிருத்தல் வேண்டுமென்று றசூலுல்லா திருவுளம்பற்றியதாக அபீஹுறைறா றளியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது.

இப்னு அபீமுலைக்கா அறிவித்தார் நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களின் பத்தினியாகிய ஆயிஷாநாயகி அவர்கள் ஒரு ஹதீதை நபிகளுநாயகம் சொல்லக் கேட்பார்களாயின் அன்றியதை யறிந்து திட்டப்படுத்திக்கொள்ளு மபொருட்டு மீண்டுமதைச் சொல்லும்படி கேட்பவர்களாயிருந்தனர். ஒருபோது நபிகளுநாயகமவர்கள் திருவுளம்பற்றினார்கள் "கியாம" நாளில ஒருவன் நன்மை தீமைகளைப்பற்றக் கேட்கப்படுவானாயின் அவன் ஆக்கினை செய்யப்படுவான் என்று, அப்போது ஆயிஷா நாயகி அவர்கள் அல்லாகுத்த ஆலா "கியாம" நாளில் மிக் இலேசாய்க் கேள்வி கணக்குக் கேட்பானென்று "குர்ஆனில்" திருவுளம்பற்றவில்லையா? என்று சொல்லி அந்தக் கருத்தமைந்த ஆயத்தை யோதிக்காட்டினார்கள். அதற்கு நாயகமவர்கள், அது நன்மை தீமைகளை யெடுத்துக்காட்டுதலே அன்றி வேறொன்றல்ல. ஆதிமுதல் அந்தம்வரையும் நன்மைதீமைகளைக் குறித்து ஒருவன் கேட்கப்படுவானாயின் அவன் ஈடேறமாட்டான் என்று திருவுளம்பற்றினார்கள்.

அபீசுறைஹைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது. அதாவது. அம்றிபுனு ஸயீது என்பவர் மக்காவுக்கு சேனைகளை அனுப்ப எத்தனித்தபோது மேற்கூறிய அபூசுறைஹு அவருக்குச் சொன்னதாவது: அரசரே! நபிகள்நாயகம் மக்காவைக் கைவசப்படுத்திய தினத்தில் அவர்கள் சொல்லியதை என்னுடைய இரு காதுகளும் கேட்டு என் மனதுட் பதிந்தும், என்னுடைய இரு கண்கள் கண்டதுமான ஒரு ஹதீதைத் தங்களுக்குச் சொல்ல எனக்கு உத்தரமளியுங்கள் என்றார். அவர்களது அநுமதிக்குப் பின்னர் சுறைஹு சொன்னதாவது நிச்சயமாய் மக்காவை அல்லாகுத்த ஆலா மகிமைப்படுத்திவைத்தான் மனிதர்கள் அதை மகிமைப்படுத்துகின்றார்களில்லை. ஆகவே, அல்லாவைக்கொண்டும், கடைசிநாளைக்கொண்டும் விசுவாசம்வைத்த ஓர் மனிதனுக்கு அந்த மக்காவில் இரத்தத்தை யோட்டுதலும், அதிலுள்ள மரங்களை வெட்டுதலும ஹலாலாகாது என்று நபிநாயகம் திருவுளம்பற்றி, பின்னேயும் பகர்ந்தார்கள் மக்காவிலே றசூலுல்லாவினது சண்டையில் இரத்தங்களை யோட்டப்பட்டதைக்காரணமாய்க்கொண்டு அ

ங்கு இரத்தம் ஓட்ட ஒருவன் நியாய வழி தேடுவானாயின் நிச்சயமாய் அல்லாகுத்தஆலா அவனது ஹக்குக்கு அவ்வாறு உத்தரமளித்து அதன்படி அவர்கள் செய்தார்களென்றும், உங்களுக்கு அங்ஙனம் உத்தரவு அல்லாகுத்த ஆலாவால் கொடுக்கப்படவில்லையென்றும், அந்த உத்தரவு பகலில் ஒருமணி நேரமட்டுமிருந்து திரும்ப சென்ற மணித்தியாலத்தைப்போல் அதனுடைய மகிமை யதற்கு வந்திட்டதெனவும், அவனுக்குச் சொல்லுங்கள். இதை இங்கு சமூகந்தந்தவர்கள் சமூகந்தராதவர்கட்குத் தெரிவிக்கவும் என்றுந் திருவுளம்பற்றினார்கள் என்பதே.

உமறு றளியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியபடி அபீசுறைறாக்குச் சொல்லப்பட்டது. அதாவது அபாசுறைறே உம்மைவிட இவ்விஷயத்தில் நான் அறிவேன். மக்காவானது குற்றஞ்செய்தவனையும், ஒருவனை பாழாக்கி ஒளித்துவந்தவனையும், காத்துக்கொள்ளாது என்பதேயாம்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம்பற்றியதாக அபீபக்கருவைத்தொட்டும் வரப்பட்டிருக்கின்றது. அதாவது உங்களின் மகிமைகள் உங்களுடைய இந்தமாசத்திலுள்ள இந்த தினத்தினுடைய மகிமையைப்போல் மகிமை பெற்றிருக்கின்றன. ஆகவே இங்கு சமூகந்தந்தவர்கள் சமூகந்தராதவர்கட்கு இதைத் தெரிவிக்கவும் என்று "ஹஜ்ஜு" ப்பெருநாள் தினத்தில் பகர்ந்தார்கள்.

## காலஞ்சென்ற முஸ்தபா காமல் பாஷா.

---

மிஸ்றிய சுதேசாபிமானியும், சுதேசாபிமான கூட்டத்தின் தலைவருமாயிருந்த மேன்மைதங்கிய முஸ்தபா காமல்பாஷா அவர்களின் மரணத்தைக்குறித்த துக்கசமாசாரத்தைச் சென்ற சஞ்சிகையில் தந்தோம். இச்சஞ்சிகையில் அவரின் பிரதிபிம்பப் படத்தைத் தருவதோடு அவரின் சிறிய சரித்திரத்தையும் அவர் மிஸ்றில் பிறப்பித்த சுதேசாபிமான முயற்சியையும் பற்றிய சில விஷயங்களைத் தருகின்றோம். இருபத்தைந்து வருடங்களுக்கு முன் மிஸ்றில் தோன்றிய சுதேசாபிமானிகள் தம்முயற்சியில் அபஜயப்பட்டபொழுது இலங்கையே அவர்கள் குடியிருக்கும் தானமாகி அவர்களின் நேசத்தை இலங்கை முஸ்லிம்கள் பெற்றுக்கொள்ளவும் மிஸ்றிய இராஜாங்கவிஷயத்தை யதிகமாய்க் கவனிக்கவும் நேரிட்டது. ஆதலின் மிஸ்றிய சுதேசாபிமானம் திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்ட இக்காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் மிஸ்றிய இராஜாங்க விஷயத்தை யதிகமாய்க் கவனிப்பது இயல்பான காரியமே. ஆனால் அப்படி கவனிப்பவர்கள் மிஸ்றை தற்போது பிடித்திருக்கின்ற ஐரோப்பிய சாதியார் எங்களை யாளுகின்ற இங்கிலீஷியர்களென்பதை மறந்துவிடப்படாது. மிஸ்றுக்கு இங்கிலீஷியர்கள் நல்ல நோக்கத்தோடு சென்றார்களென்பதை மறுக்கக்கூடாது. அறபி பாஷா அவர்களைத் தலைவராய்க் கொண்ட இராணுவக்கூட்டம் கலகம் பண்ணியபொழுது, அக்கூட்டத்தார் அனுகூலப்பட்டால் க

தீவின் அதிகாரம் அற்றுப்போகுமென்றும், அது அற்றுப்போனால் மிஸ்றின் ஒழுங்கான ஆளுகைக்கு இடையூறு சம்பவிக்குமென்றும் எண்ணி கதிவைக் காப்பாற்றுவதற்காக இங்கிலீஷியர் மிஸ்றுக்குச் சென்றார்கள். அக்காலத்தில் பிரிட்டிஷ் முதன் மந்திரியாயிருந்த மெஸ். க்லாட்ஸ்டோனும், இஸ்தம்பூலில் பிரிட்டிஷ் பிரதிநிதியாயிருந்த லார்ட் டப்ரினும் இங்கிலீஷியர் மிஸ்றில் கலகத்தை யடக்கிவிட்டுக் கதிவின் அதிகாரத்தை பலப்படுத்திய பிறகு மிஸ்றிலிருந்து போய்விடுவார்களென்று வாக்களித்தார்கள். அந்த வாக்குப்படி கதிவின் அதிகாரம் பலப்படுத்தப்பட்ட பிறகு இங்கிலீஷியர் போய்விடாமல் மிஸ்றை நிரந்தரமாய்ப் பிடித்துக்கொள்ளுதற்கு வழி தேடுகின்றார்களென்றறிந்த அவர்களுக்கெதிராய் மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தாரும் அவர்களின் தலைவரான மேன்மைதங்கிய முஸ்தபா காமல் பாஷாவும் கொண்டுவந்த குற்றச்சாட்டு. இவர்கள் பிரிட்டிஷியரை அவர்களின் வாக்குப்படி மிஸ்றை மிஸ்றிகளுக்கு ஒப்புக்கொடுத்து விட்டுப் போகும்படி கேட்கிறார்களன்றி இங்கிலீஷியருக்கெதிராய் நியாயக்கேடான காரியங்கள் யாதொன்றும் செய்யவில்லை. இவர்களின் நியாயமான கிளர்ச்சி ஐரோப்பிய இராஜதந்திரிகள் மிஸ்றிய விஷயத்திற்குக் கவனஞ்செலுத்தவும் மிஸ்றிகளின் கேள்வியின் நியாயத்தை நாளுக்குநாள் விளங்கிக்கொள்ளவும் செய்திற்று. இன்னுங் கொஞ்சங்காலத்திற்கு மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தார் தம்முயற்சியை நடத்திவரில் மிஸ்றில் பார்லிமேந்து ஸ்தாபிக்கப்பட்டு மிஸ்றிகளே மிஸ்றை யாளுதற்கு நேரிடுமென்றெண்ணக் கூடியதாயிருக்கிறது. மிஸ்றிகள் கல்வியில்லாதிருப்பதே அவர்கள் தன்னிஷ்டத்தைப் பெற்றுக்கொள்ளுதற்கு பாரிய தடையாயிருக்கிறதென்று இங்கிலீஷ் துரைத்தனத்தார் கூறுகின்றார்கள். மிஸ்றில கல்வியைக் குறைத்து வைத்துக் காரியங்களை இங்கிலீஷ் துரைத்தனத்தார்களே செய்கின்றார்களென்று மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தார் காட்டுகின்றார்கள். இவ்விதமான முட்டுதல் இங்கிலீஷியர்களுக்கும் மிஸ்றிகளுக்குமிடையில் உண்டாயிருந்த காலத்திலேயே மிஸ்றிய சுதேசாபிமான தலைவரான மேன்மைதங்கிய முஸ்தபா காமல் பாஷா மரணமடைந்தார். அவருக்கு பதல் தலைவராய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற மேன்மைதங்கிய முகம்மது பரீதுபே அவர்கள் மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தை எவ்வாறு நடத்துகிறாரென்று இனிமேல் நாங்கள் அறியவேண்டும். ஆனால் அவர் தாம் ஏற்படுத்தப்பட்டவுடன் இங்கிலீஷ் புறதேச மந்திரியான சார் எட்வர்டு கிறே அவர்களுக்கு வோர் தந்தி அனுப்பி தாம் காலஞ்சென்ற முஸ்தபா காமல் பாஷாவுக்கு பதல் மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தின் தலைவராய் நியமிக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்ததோடு, மிஸ்றை பிரிட்டிஷியர் விட்டுவிடச்செய்தற்காய் மேற்படி கூட்டம் இதுகாறும் நடத்திவந்த நியாயமான எழுச்சி இனிமேலும் நடத்தப்படுமென்று அறிவித்திருக்கின்றார். நிற்க.

முஸ்தபா காமல் பாஷா நீண்டகாலம் நோயோடெதிர்த்து நின்று கடைசியாய் ஹிஜறத்து 1326 ம் வருஷம் 8 உ, அதாவது

கிறீஸ்து வருஷம் 1908ம் ஆண்டு பெப்ருவரிமாதம் 10ந் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் தேகவியோகமானார்கள். அவர் ஹிஜறத்து 1291ம் வருஷம் றஜபு மாதம் 1ந் திகதி பிறந்தவர். ஆதலின் அவர் 34 வருடங்களும் 5 மாதங்களும் 8 நாட்களும் சீவித்திருந்தனர்.

அவர் ஆறு வயதில் கல்வி படிக்கத் துவங்கி சொற்பகாலத்திற்குப்பின் கயறோவிலுள்ள அப்பாஸ் பாஷா (முதலாவது) வின் தாயாலுண்டாக்கப்பட்ட பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அக்காலத்தில் அவரின் பிதாவும் தகஹ்லியா மாகாணத்தில் சிரேஷ்ட என்ஜினீரா யிருந்தவருமான அலி அபந்தி முகம்மது மவுத்தாகவே முஸ்தபா தமது மூத்த சகோதரரான ஹுஸைன் பே வாஸிபின் பாதுகாப்பிலானார். அவரின் கீழ் முஸ்தபா காமல் தேர்ச்சியடைந்து வந்தனர். இவர் கலேபியா பாடசாலையில் காலஞ்சென்ற கதீவு தவுபீக்கு பாஷா அவர்களின் சமுகத்தில் நடத்தப்பட்ட பரிசோதனையில் அனுகூலமடைந்து இரண்டாந்தர பாடசாலைக்கனுப்பப்பட்டார். அங்கு நாலு வருடம் படித்துவிட்டுப் பிரகாசமும் நம்பிக்கையுமுள்ள வோர் மாணுக்கராய் வெளிப்பட்டனர். அவர் பதினைந்து வயதில் கதீவிய நியாய சாஸ்திர பாடசாலையிலும் பிரான்ஸிய நியாயசாஸ்திர பாடசாலையிலும் நியாய சாஸ்திரம் கற்கத்துவங்கினர். அக்காலத்திலேயே அவர் இராஜாங்க விஷயத்திற் றலையிட்டனர். பத்தொன்பது வயதில் முஸ்தபா காமல் தமது நண்பர்களான மற்றும் மாணுக்கர்கள் செய்யுமாறு பிரான்சுக்குப் போய் தூலூஸ் பட்டணத்தில் நியாய சாஸ்திர பரிக்ஷையில் அனுகூலமடைந்தனர். அதன்பின்னர் அவர் கல்வியின் பலமும் சுயாதீனமுமுடையவராய் இப்பொழுது அவரின் மரணத்தோடு முடிவுபெற்ற அப்பெருமுயற்சியில் தலையிட்டு ஊக்கத்தோடும் களைக்காமலும் இராஜாங்க விஷயத்திற்கடுத்த திருத்தங்களைப் போதித்துவந்தனர். கயறோவிலிருந்த பல திருத்த சபைகளிற் சேர்ந்து அதனங்கத்தவர்களுக்குத் தக்க புத்திகளைக் கூறிவந்தனர். அவர் தூலூஸிலிருந்த காலத்தில் பிரான்ஸிய பிரஜாதிபத்திய அரசாட்சியின் தலைவருக்கு வோர் விண்ணப்பப் பத்திரமனுப்பி மிஸ்றின் குற்றங்களையும் துன்பங்களையும் தெரிவித்ததோடு வோர் பரிகாச சித்திரமுமனுப்பினர். இந்தத் துணிகரமான செய்கை பகிரங்கமாய் அறியப்பட்டவுடன் அவர் தூலூஸ் பட்டணத்தில் இராஜதந்திரிகளின் சபையொன்றில் மிஸ்றின் இராஜாங்க விஷயத்தைக் குறித்துப் பேசும்படி கேட்கப்பட்டார்.

அவர் சாதுரியமான வோர் பிரசங்கியென்பது அவரின் பேச்சைக் கேட்டவர்களறிந்த விஷயம். அவர் சபையில் பேசும்பொழுது ஜனங்களில் உற்சாகத்தையும் தேசாபிமானத்தையும் அதிகமாய்க கிளப்பிவிடுபவர். குடியரசுக்காகவே யெப்பொழுதும் பேசுகின்றவரா யிருந்தனர். அவரின் பிரசங்கத்தைக் கேட்பதற்கு எளிய நாட்டவர்கள் துவக்கம் ஐசுவரியமுள்ளவர்கள் வரையிலுள்ள பல வகுப்பு ஜனங்களும் போனார்கள். அவர்களெல்லோருக்கும் மிஸ்று தேசத்தாரின் சகோதர தன்மையையே போதித்தனர். அவர் ஜனங்களால் தங்களின் பாதுகாவலரென்றும் இரக்ஷகரென்றும் கவனி

க்கப்பட்டாரென்பதற்குப் பல அத்தாட்சிகளிருக்கின்றன. அவர்களுக்குத் தங்களெஜமான்களால் அல்லது அரசாட்சியால் துன்பமுண்டுபட்டபொழுது அவர்கள் "லிவா" ஆபிஸை வளைந்துகொண்டு முஸ்தபா பாக்ஷாவைக் குறுக்கிட்டுத் துணைசெய்யும்படி கேட்பது வழக்கமாயிருந்தது. அத்தருணங்களிலெல்லாம் அவர் தாம் கைக்கொண்ட விதிகளைக் கைக்கொள்ளுமாறு தம் நண்பர்களுக்குப் புத்தி கூறினர். அவை திடம், நேர்மை, நீதி, கடமை ஆகியவைகளே. ஒருநாள் அவர் அலக்ஸாண்டிரியாவில் ஓர் சபைக்குப் பிரசங்கித்தற்காய் ஓர் கூலி வண்டியில் போய் அந்த வண்டியையொரு மணித்தியாலம் சுனக்கவிட்டுக் கூலியைக் கொடுக்க வண்டிக்காரன் அதை யெடுக்க அல்லத்தட்டியதோடு தன் சாதியாரின் தலைவருக்கு அற்ப சேவகம் செய்தற்குக் கிடைத்ததே தனக்குப் பெரும் ஆநந்தத்தையும் பெருமையையும் கொடுக்கின்ற காரியமா யிருக்கிறதென்று கூறினான். இதைக்கொண்டு முஸ்தபா காமலின் வார்த்தைகள் எந்தமட்டுப் பதிந்திருந்தனவென்று வாசிப்பவர்கள் விளங்கிக்கொள்வார்கள். மிஸ்ரிலுள்ள சர்வ மாணுக்கர்களும் முஸ்தபா காமல் பாக்ஷாவுக்குத் துணையாயிருந்தார்கள். அவர் ஐரோப்பாவிலிருந்து சில மாதங்களின் முன் மிஸ்றுக்குத் திரும்பி வந்தபொழுது கயறோ றேல்வே ஸ்டேஷனில் மாணுக்கர்கள் திரளாய்க் கூடி அவரை சன்மானத்தோ டழைத்தார்கள். அவர் பெயர்பெற்ற பிரசங்கியாயிருந்ததோடு அதிஜயிக்கத்தக்க விகிதராயுமிருந்தனர். கொஞ்சங்காலத்தின் முன் "டேலி நியூஸ்" பத்திரிகை கூறியவாறு அவர் முஸ்லிம் உலகத்திலுள்ள மிக்க வுன்னதமான பத்திராதிபர்களுளொருவராயிருந்தனர். அவர் பள்ளிக்கூட மாணுக்கனாயிருந்த காலத்திலேயே றோமரின் அடிமைத்தொழிலைக் குறித்து வோர் நூலெழுதினார். "ஜாதிகளின் ஜீவியம" என்றொரு நூலும், "அந்தலூசியாவின் வெற்றி" என்ற நாமத்தோடு வோர் சரித்திரக்கதையும எழுதினர். அவர் பத்தொன்பது வயது கழியமுன் "அல்மதரஸா" என்று பாடசாலைப் பத்திரிகை யொன்றிஸ்தாபித்தனர். அதன் நூதனத்திற்சம் மிஞ்சிய பேச்சிற்தமாய் அதில் ஐம்பது பிரதிகள் மிஸ்று கலாவிஷய மந்திரியால்வாங்கப்பட்டன. அவர் 1900ம ஆண்டு "அல்-லிவா" பத்திரிகையை யுண்டாக்கமுன அவர் அறபியிலும் பிறான்ஸிலும் சுதேச பத்திரிகைகளுக்கும் அந்நிய பத்திரிகைகளுக்கும் செய்திகளெழுதினர். அவர் பிறான்ஸ் பாஷையை நன்கறிந்திருந்ததால் மிஸ்று விஷயத்தை ஐரோப்பாவின் கவனத்திற் பதிக்கக்கூடியவரா யிருந்தனர். பிற்காலத்தில் பெரும்பாரமான வேலைகளைச் சுமந்திருக்கையிலும் அவர் ஜப்பானைக் குறித்தும் கிழக்குத்தேச விஷயத்தைக் குறித்தும இரு புத்தகங்களெழுத நேரத்தைப் பெற்றுக்கொண்டனர். அவரின் ஐரோப்பிய நேசர்களுள் பலர் பிறான்ஸியர்களே. அவர் நற்குணங்களுள்ளவர். அதுவே அவரோடு மனிதர்களுக்குள்ள பற்றுதலின் காரணம். அவரின் ஆயுள் நண்பரான மடாம் ஜூலியற் அடாம் என்ற பிறான்ஸிய மாது அவரின் பிரசங்கங்களை யோர் பிறான்ஸிய நூலாய்த் திரட்டித் தமது முகவுரையோடு பிரசுரித்தனர். அம்முகவுரையில் அம்மாது முஸ்த

டா காமலின் சாமார்த்தியத்தையும் நற்குணங்களையும் வியந்து கூறியிருக்கின்றார். முஸ்தபா காமல் ஐரோப்பாவில் பிரயாணஞ்செய்து நண்பர்களை யதிகப்படுத்திக் கொண்டதின் நோக்கம் அவர்களின் செல்வாக்கைத் தம் தேசத்திற்குப் பெற்றுக்கொள்ளவும் மிஸ்ரை இங்கிலீஷ்யார் பிடித்த பிறகு மிஸ்ரிகள் சுதேசிகளென்று கண்டிக்கப்படுவதைத் தடுத்துக்கொள்ளவுமே. இக்காலத்தில் பிரான்ஸியர் மிஸ்ரிகளை யபிமானித்து மதித்திருப்பதற்கும், மிஸ்ரிகள் பிரான்ஸியருக்குக் காட்டும் பட்சத்திற்கும் முஸ்தபா காமல் பாஷா அவர்களின் போதனையே முக்கிய காரணம். ஐரோப்பாவின் கல்விமான்களின் சமூகத்தில் பேசுதற்கு அவரைப்போன்ற கல்வியும், நற்குணமும் விடாமுயற்சியுமுள்ள ஒருவரை மிஸ்ரிகள் பெற்றுக்கொண்டது அதிர்ஷ்டமே. பிரான்ஸைத் தற்போது அச்சுறுத்துகிற தையிரியமும், அபக்ஷம், சுதேசாபிமானமின்மை ஆகிய மூன்று காரியங்களுமே மிஸ்ரையும் அச்சுறுத்துகின்றனவென்றும் அவை எதிர்த்துவரும் ஓர் சேனையைப் பார்க்கிலும் ஆபத்துள்ளவையென்றும் அவற்றிற்கெதிராகவே முஸ்தபா காமல் பாஷா தம் தேசத்தவர்களுக்குப் புத்தி சொல்லுகிறவரா யிருந்தனரென்றும் மேற்படி அடாம் மாது தமது நூலில் கூறியிருக்கின்றார்.

மிஸ்றின் தேர்ச்சிக்கு மேற்குத் தேசத்தவர்களின் கல்விமுறையான ஆயுதங்களைக் கைப்பற்றுவது ஆவசியகமான காரியமென்ற நிச்சயம் முஸ்தபா காமலுக்குண்டாயிருந்தாலும், கிழக்குத் தேசத்திற்கும் மேற்குத்தேசத்திற்கு மிடையில் நெருக்கமான சம்பந்தமுண்டாக்குவது ஆவசியமென்று அவர் ஓய்வின்றிச் சொல்லுகிறவராயிருந்தாலும் அவர் பிறந்து வளர்ந்த இஸ்லாமார்க்கத்தின் பிரமாணங்களுக்குப் பற்றுதலுடையவராகவேயிருந்தனர். அவருக்கும் துருக்கிக்குமிடையிலுள்ள சம்பந்தம் பலரால் தப்பாய் விளங்கிக்கொள்ளப்பட்டாலும் தப்பாயெடுத்துக் காட்டப்பட்டாலும் மாட்சிமை தங்கிய சுல்தான் அவர்களின் கருத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விடங்களில் அவர் சுல்த்தான் அவர்களுக்குச் சார்பாகவே இருந்தார். துருக்கி தன்னுலேன்றிய அளவு மிஸ்றின் சுயாதீனத்தைக் காத்துக்கொள்ளுமென்று அவர் நம்பியிருந்தனர். பிரான்ஸ் மிஸ்ரை விட்டகன்ற பிறகு மிஸ்றுச் சாம்ராஜ்யாரின் அழிவைத் தடுக்கவேண்டியது துருக்கியேயென்று முஸ்தபா காமல் நிச்சயித்திருந்தனர். மேலும் அவர் சுல்த்தான் அவர்களால் சங்கை செய்யப்பட்டனர். வைர இரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஸோர் பொன் ஸிகரட் பெட்டி மாட்சிமை தங்கிய சுல்தான் அவர்களால் 1899ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7ம் திகதி முஸ்தபா காமல் பாஷா அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்கு எட்டு நாட்களுக்குப்பின் இரண்டாம் வகுப்பு மஜ்தியா பட்டமும் 1899ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ந் திகதி றுத்பா-உலா-ஸன்புதானி என்ற பட்டமும் அவருக்கு சுல்த்தான் அவர்களால் கொடுக்கப்பட்டன. ஒன்றின்பின்னொன்றாய் வந்த இம்மூன்று கண்ணியங்களும் மேற்படி வாலிப மிஸ்று சுதேசாபிமானி உதுமானிய விராசசிய தலைவரால் எவ்வாறு மதிக்கப்ப

ட்டாரென்று காட்டுகின்றன. முஸ்தபா பாஷா அவர்களின் காலஞ் செல்லச்செல்ல சுறுசுறுப்பு மதிகப்பட்டது. அவர் பெற்றுக்கொள்ளுதற்கு முயற்சித்த தன்னிஷ்டத்திற்கு சூதானை இங்கிலாந்து பிடித்ததும், பஷோதா விஷயமும், அங்கிலேய பிரன்ஸிய பொருத்தமும் பாரிய தடைகளாயின. ஆகிலும் அவர் அதிஷ்டத்தைக் கண்டவுடன் தள்ளாடவில்லை. இராஜாங்க விஷயத்தில் தமக்கிருந்த உதவிகள் குறைந்ததையும். தமது நண்பர்கள் தம் தேசத்தைக் கைவிட்டதையும் அவர் கண்டபொழுது அவரின் தைரியம் அதிகப்பட்டது. சுறுசுறுப்பு மேலிட்டது. அவர் கடைசியாய்ச் செய்த பெருமவேலை சென்ற டிஸம்பர் மாதம 27ந் திகதி மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தைச் சீர்படுத்தியதே.

அன்று முஸ்தபா காமல் பாஷா நோயாளியாயிருந்தும் மரணத்தின் கை தன்னைப் பிடித்திருந்தும் தம் தேசத்தவர்களின் ஓர் பெரும் சபைக்குச் சென்று நீளமான வுபந்நியாசமொன்று செய்தனர். அவ்வுபந்நியாசம் மிஸ்று சரித்திரத்தில் ஓர் பிரதானமான தானத்தைப் பெற்றுக்கொள்ளுமென்பதற் கையமில்லை. அப்பொழுது அவரின் தேசததார்கள் அவரைப் புகழ்ந்ததோடு சுதேசாபிமான கூட்டத்தின் சட்டங்களுக்கமைவதாய் வாக்களித்தார்கள். மேற்படி கூட்டமே அவர் மரணிக்கும்பொழுது தம் தேசத்தார்களுக்குக் கொடுத்த மரணசாதனப்பொருள். அந்தச் சபையில் அவர் தம் வேலையைச் செய்துவிட்டுத் தமது படுக்கைக்குத் திரும்பியபிறகு அவர் தம் வீட்டிலிருந்து உயிரோடு வெளிக்கிடவுமில்லை. தமது தேசவாசிகளின் முன் பிரசங்கிக்கவுமில்லை.

ஐரோப்பிய புதினப் பத்திரிகைகள் மிஸ்று விஷயத்தை அறியாமையாலும் குரோதத்தாலும் ஐரோப்பிய சாதியார்களுக்குத் தப்பாய் எடுத்துக்காட்டுவதை முஸ்தபா காமல் பாஷா கண்டவுடன் மிஸ்று விஷயத்தை ஐரோப்பாவுக்குச் சரியாய் எடுத்துக்காட்டுதற்கும் மிஸ்று தேசத்தாரின் உரித்துகளைப் பாதுகாத்தற்குமாய இங்கிலீஷில் "இஜப்சியன் ஸ்டாண்டர்டு" என்ற பத்திரிகையையும் பிரான்ஸ் பாஷையில் "லாஇற்றண்டெர்டு இஜப்சியன்" என்ற பத்திரிகையையும் அமைத்தனர். இவை தினந்தோறும் பிரசுரிக்கப்படுகின்றன. தின்சாவை வழக்கில் நடந்த அநீதியால் மிஸ்று சாதியார் அச்சங்கொண்டபொழுது அவ்வழக்கில் அநீதியாய்க் கண்டிககப்பட்ட மறியற்காரர்களை விடுதலையாக்கும்படி ஓர் கேள்விப் பத்திரம் முஸ்தபா காமலின் முயற்சியால் அரசாட்சிக்குக் கொடுக்கப்பட்டது. அக்கேள்விப் பத்திரத்தில் 12,500 கையெழுத்துகளிடப்பட்டிருந்தன. அவ்வழக்கில் நிகழ்ந்த அநீதியை மேற்படி இருபதகிரிகைகளும் சீர்திருத்தமுள்ள வுலகத்திற்கு எடுத்துக் காட்டின. அந்த மறியற்காரர்கள் விடுதலையாக்கப்பட்ட பொழுது அவர்கள் முன் தரிசித்த விடங்களுள் "அல்-லிவா" ஆபிசுமொன்றே. தின்ஷாவைக் காரியத்தில் பிறிட்டிஷியரின் செயல் நியாயமானதென்று காட்டுதற்காய் மிஸ்று தேசத்தார் மதவைராக்கியமுள்ளவர்களென்று பிறிட்டிஷ் புறதேச மந்திரி சொல்லியபொழுது முஸ்தபா காமல் முயற்சித்து அக்குற்றச்சாட்டை அம்மந்திரியெடுத்துப்போடச் செய்தனர்.

முஸ்தபா காமல் பாக்ஷா அவர்கள் மிஸ்றுக்காய் செய்கிற வேலையைக்குறித்து உலகத்திலுள்ள புதினப் பத்திரிகைகளில 100,000 செய்திகளுக்கதிகம் எழுதப்பட்டிருக்கின்றன. அவர் 1899 ம் ஆண்டு மார்ச் மாதம் ஸலந்தர்பலேயில் ஓர் பாடசாலை யமைத்து எளிய பிள்ளைகளுக்குச் செலவில்லாமல் படித்துககொடுத்தனர். மிஸ்றில் கல்வி கற்றுக்கொடுக்கும் முறையை ஆலோசிப்பதற்காய் ஓர் கலா சங்கம் (கன்பறன்ஸ்) கூட்டுதற்கு முயற்சித்தனர். ஆகிலும் அது நிற்பாக்கியமாய் அவரின் சுகவீனமே காரணமாய் தவணை போடப்பட்டது. அவர் கலா விஷயத்தை யெந்தமட்டுக கவனித்திருந்தாராயின் தின்ஷாவை மறியற்காரர்கள் விடுதலையாக்கப்பட்டதற் கோர் ஞாபகஸ்தம்பமாயும் மறியற்காரர்களோடு பிடிககப்பட்டுத் தூக்கப்பட்டவர்களுக்காய் தின்ஷாவை கிராமத்தில தூக்குமரஙகள் போடப்பட்டவிடத்தில் ஓர் சிறு பாடசாலை கட்டுதற்குத் தீர்மானித்து அதற்காய் நிதி சேர்க்கவும் மற்றும் காரியங்கள் செய்யவும் தலைப்பட்டனர். அவர் கடைசியாய்த தம் சகோதாருக்குச சொன்ன புத்தியாவது:—

" தைரியமும் முயற்சியுமுள்ளவனாய் இருந்துகொள். என்னைத் தொடர்ந்து நட. எனது வேலை மரணிக்கமாட்டாதென்று உறுதியாய் அறிந்துகொள். எங்கள் சாதிமுழுதும் உன்னோடிருக்கும். எங்கள் காரியம் நியாயமானது. ஆதலால் நாஙகள் அபஜயப்படக்கூடாது. எனது மரணத்திற்காய் எங்கள் சத்துருக்கள் ஆனந்தமடைந்தாலும் அவர்களும் மரணித்துப்போவார்கள். ஆகிலும் மிஸ்றே எக்காலமும் நிலைத்திருக்கும். சுதேசாபிமான கூட்டம் சீர் படுத்தப்பட்டதற்காயும் தற்போது போடப்பட்டிருக்கிற அத்திவாரத்தின்மேல் கட்டுதற்கு மனிதர்களிருப்பதற்காயும் நான் அல்லாகுத்த ஆலாவுக்கு நன்றி கூறுகின்றேன். நாங்கள் நம்பியிருந்த எஙகள் பட்சமுள்ளதேசதின் மேம்பாட்டைப் பெற்றுக்கொள்ளக் கூடியதெதுவோ அதை அவர்கள் கட்டுவார்கள்" என்றதே.

முஸ்தபா காமல் பாக்ஷாவின் நோய் அவரின் நண்பர் லத்தீபு பாக்ஷா ஸலீம் மவுத்தான துக்கத்தால் அதிகப்பட்டது. அவரிவ்வளவு சுறுக்கில் மரணிப்பாரென்று அவரின் சுற்றத்தார்களும மித்திரர்களும் நம்பியிருக்கவில்லை. ஆகிலும் காரியம அப்படியே சம்பவித்தற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவர மரணப்படுக்கையிலும் இராஜாஙக காரியத்தைக்குறித்த வேலையைச் செய்தனர். ஜனவரிமாதம 19 ம் திகதி அவர் மிஸ்றிய சுதேசாபிமான கூட்டத்தின் நமத்தில் பிறிட்டிஷ் முதன் மந்திரிக்கு ஓர் தந்தியனுப்பி சூதானைக்குறித்துச செய்யப்பட்ட ஆங்கிலேய மிஸ்றிய பொருத்தம் நியாயமற்றதெனக் கூறி யதனைத் தடுத்தனர். திரும்பவும் பெப்ருவரிமாதம் 4 ம் திகதி, அதாவது அவரின் மரணத்திற்கு ஆறு நாட்களுக்குமுன் சார் எட்வர்டு கிறேக்கு ஓர் தந்தி அனுப்பி மிஸ்று ஜனங்கள் தன்னரசாட்சியைப் பெற்றுக்கொள்ளுதற்குத் தகுதியுள்ளவர்க ளல்லவென்று அவர் கூறிய அபவாதத்தைத் தடுத்தனர்.

அதன் பின் அவரின் முடிவு வந்தது. பெப்ருவரிமாதம் 10 ம் திகதி காலை 10 மணியளவில் அவரில் அச்சமுண்டாக்கத்தக்க குறிக

ள் தோன்றின. பிற்பகல் 4 மணியளவில் அம்மகான் இறந்தார். இச்சமாசாரம் வெளிப்படுத்தப்பட்டவுடன் ஒரு காலமும் மறக்கக்கூடாத வோர் தோற்றம் "அல்-லிவா" ஆபிஸின் முற்ற வெளியில் உண்டுபட்டது. அந்த பட்டணத்தின் பல பாகங்களிலிருந்து ஜனங்கள் வந்து கூடினார்கள். அவர்களின் முகங்களில் அச்சமும் துக்கமும் தோன்றின. வயோதிபர்கள் பாலகர்களைப்போல் அதிகமாய் அழுதார்கள். இவ்விதமான துக்கம் கல் மனத்தையும உருக்கிவிடும. மனிதர்களும் சிறுவர்களும் சத்தமிட்டழுது ஆறாக் கவலையிலானார்கள். அவர்களின் கவலை கூய யாற்றகூடியதா யிருக்கவில்லை. அவர்களின் கவலையாறியபிறகு அவர்களின் விக்கிரகமாகவும் தலைவராகவுமிருந்த மூஸ்தபா காமல் பாஷா தமது அந்தியகாலம வரையில் தாம போதித்த விதிகளைத் தோஷமற்றவைகளாய் வைத்திருந்தாரென்றும், கடைசிநேரம் வரையில தம தேசத்திற்காய் உற்சாகமாக யுத்தஞ் செய்தாரென்றும், தம்மில் மனிதர்களின் நம்பிக்கை கீழ்ப்படுத்தப்படாதிருக்க தமது கபறில் இன்பமாய் வைக்கப்பட்டாரென்றும அறிந்து ஆறுதலடைவார்கள்.

மூஸ்தபா காமல் பாஷா அடக்கம் பண்ணப்பட்ட பெப்ருவரி மாதம் 11ந் திகதி மிஸ்றின் சுயாதீனத்தை விரும்பிய ஜனங்களுக்குத் துக்க நாளாயிருந்தது. அன்று தோன்றிய காட்சியைக் கண்டவர்கள் அதனை யொருபொழுதும் மறவார்கள். கயறோ பட்டணத்தில் எப்பொழுதாவது அவ்விதமான வோர் சாச்சடங்கு நடைபெறவில்லையாம். மூஸ்தபா காமல் பாஷாவின் வீட்டிலிருந்து இமாம் கபறுஸ்தானம் வரையிலுள்ள மூன்று மைலுக்கதிகமான தூரத்திற்குச்சென்ற சனத்திரள் அவர் ஜனங்களால் எந்த மட்டு வுவக்கப்பட்டாரென்று அவரின் நண்பர்களுக்கும் சத்துருக்களுக்கும் காட்டிவிட்டது. மையத்துக் கொண்டுபோகப்பட்ட பொழுது தெருக்களி னிருபக்கத்தில் நெருங்கி நின்றவர்களைத் தவிர மையத்தோடு கபறுஸ் தானத்திற்கு ஒரு லட்சம் ஜனங்கள் சென்றார்களென்று "இஜப்சியன் ஸ்டண்டர்டு" பத்திரிகை கூறுகின்றது. வீட்டுச் சனல்களிலும். மேடைகளிலுமிருந்து மனிதர்கள் அழுதார்கள். வயோதிபர்களும் சிறுவர்களும் பெண்களும் பிள்ளைகளும் சத்தமிட்டழுதார்கள். மூஸ்தபா காமல் தைரியத்தோடும் பிடிவாதத்தோடும், மாறாத சுதேசாபிமானத்தோடும் உழைத்தவராதலின் ஜனங்களா லவ்வாறு உவக்கப்பட்டிருந்தனர். அவர் தம் தேசம் மிதிக்கப்படுவதையும் நெருக்கப்படுவதையும், அதன் வலிமை தூசிக்கப்படுவதையும், அதன் சங்கை நிந்திக்கப்படுவதையும கண்டபொழுது அதற்குப் புது வுயிர் கொடுக்கவும், தனது தைரியத்திற் கொஞ்சத்தைக் கொடுக்கவும் அதன் தலையை யுயர்த்தச்செய்யவும், அதன் மக்கள் அதைக் கொண்டு பெருமை யடையப்பண்ணவும் துணிந்தனர். அவருக் கெதிரான மனச்சாய் விருந்தாலும், அவர் தப்பாயெடுத்துக் காட்டப்படுகின்றவராயிருந்தாலும், அந்தப்பணிக்கூடாய் அவரை ஜனங்கள் அறிந்து கொண்டார்கள். அவர் தம்மெதிரிகளோடு முட்டுகின்றவரும் பின்வாங்காதவரும் என்று விளங்கிக்கொண்டார்கள். சாச்சடங்கன்று சம்பவித்த காட்சி மூஸ்தபா

காமலின் வேலைக்கு ஜனங்கள் முத்திரையிட்டது போலிருந்தது. மேலும் அது அவரின் வேலை மற்றவர்களால் நடத்தப்படுமென்பதற்குப் பிணையாயுமிருந்தது.

அன்றுமுழுதும் ஜனங்கள் "அல்-லிவா" ஆபிஸில் கூடி தங்களின் துக்கத்தையும் நஷ்ட வுணர்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள். மையத்தெடுப்பதற்கு அதிக நேரத்திற்குமுன் துவக்கம் சாரியாதிவாவனி என்ற விடத்தில் மனிதர்கள் நிறைந்து வண்டிகள் போகக்கூடாமல் நிறுத்தப்பட்டன. "அல்-லிவா" முற்றவெளியில் அடித்திருந்த கூடாரம் நிறைந்துவிட்டது. வீட்டிலிருந்து மையத்து வெளியான பொழுது தோன்றிய காட்சியை விவரிக்க இயலாது. ஆண்களின் விம்மலும் கண்ணீரும், பெண்களின் புலம்பலும, கடல் போன்ற தர்பூஷ் தொப்பிகளும், மிஸ்றுக் கொடியில் சுற்றப்பட்டிருந்த சந்தூக்கும் பார்த்தவர்களின் மனதில அழிக்கக்கூடாத பதிவை யுண்டாக்கிவிட்டன. முஸ்தபா காமல் பாடசாலையின் மாணாக்கர்கள் மையத்துக்கு முன்னே சென்றார்கள். மற்றும் மூல பாடசாலைகளினதும இரண்டாந்தரப் பாடசாலைகளினதும, கதீவியசிய பாடசாலையினதும் கதீவிய வைத்திய பாடசாலையினதும் வேளாண்மைப் பாடசாலையினதும் மாணாக்கர்கள் கறுப்புக் கொடிகளோடு போனார்கள். தாருல் உலூம் பாடசாலைகளின் செய்குமார்களும் சென்றார்கள். பெருந்தொகையான பொலிஸ்காரர்கள் மையத்துச்சென்ற தெருக்களில் நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களுட் பலர் மையத்தைக் கண்டவுடன் அழுதார்களாம். ஐந்து மணியளவில மையத்து கைஸஹுன் பள்ளிவாசலுக்குக் கொண்டு போகப்பட்டது. அங்கு தொழுவித்தற்கு இருபது நிமிஷங்கள் சென்றன. அங்கிருந்து மையத்து கபறுஸ்தானத்திற்குக் கொண்டு போகப்படும்பொழுது ஸிற்றடல் ஸ்குயர் என்ற தலத்தில் ஜனங்களின் கூட்டம் எந்தமட்டதிகப்பட்டதானல் வழியை ஒழிவித்தற்கு ஓர் கூட்டம் போர்வீரர்களை யழைக்கத் தேவைப்பட்டது. ஆறரைமணிக்கு மையத்து கபுறுஸ்தானத்திற் சேர்ந்தது. முன் மிஸ்றில் இரண்டாவது நியாய விஷய மந்திரியாயிருந்த இஸ்மாயில பாஷா ஸப்ரி அவர்களைக்கொண்டு மையத்தடக்கமுன் ஓர் பிரசங்கம செய்வித்தற்கு ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்தது. ஆயினும அந்தக் கனவான் அத்துணைத்திற பாடுதற்கு வோர கவி செய்திருந்தனர். அக்கவி ஹாபிஸ் இபுறாகீம் அபந்தி அவர்களால வாசிக்கப்பட்டது.

மேற்படி கவிஞர் தமது கவியில் சர்வ இருதயங்களையும் தாக்கிவிட்ட துக்கத்தை யுருவகித்துவிட்டு "கபுறே நீ இப்பொழுது பெற்றுக்கொள்ளப்போகிற விடுதிக்காரர் ஒரு சாதியின் நம்பிக்கையா யிருந்தவர். ஆதலின் அவருக்குச் சங்கை செய்து அவரைக் கண்ணியத்தோடு அங்கீகரித்துக்கொள்" என்றார். பின்பு முஸ்தபா காமலின் றாகைக் குறித்து "உண்மைக்கும் உயர்வான எண்ணத்திற்கும் பலியான நீர் புருடத்துவமுள்ள காலத்தில் மரணிப்பதைப்பார்க்க எங்களால் சகிக்கவில்லை" என்றார். திரும்பவும் அவரின் பிரேதக்குழியைக் குறித்து "ஓ கபுறு, நாங்கள் அவரில் ஓர் மனிதனை மாத்திரம் இழந்திருந்தால் எங்கள் புலம்பல் எங்களுக்குப் போதுமாகும், ஆகிலு

ம் அவரில் நாங்கள் எங்களுக்குள்ளதெல்லாம் இழந்தோம். அவருக்கொப்பான வொருவரை வெளிப்படுத்தற்கு உலகத்தால் கூடாது" என்றார். திரும்பவும் மேற்படி கவிஞர் "ஆண்மையெங்கே, புத்தியெங்கே, உயர்வான எண்ணமெங்கே, மகத்துவமெங்கே என்று நீங்கள் என்னிடம் கேட்கின்றீர்கள். அங்கே அந்தக் கபுறில் அவையிருக்கின்றன" என்றார். அவர் முஸ்தபா காமலின் சத்துருக்களைக்குறித்து அவர்களின் தேசத்தைப் பாதுகாத்தவர்கள் மிகப் பெரியவா பிரேதக்குழியில் குளிரான தேகமாயிருக்கிறார் என்றறிவது சோபனமாயிருக்குமென்று கூறிவிட்டு "ஏனென்றால் இறந்த ஆத்மாக்கள் உயிர்த்தெழும்பும் வரையில் எங்கள் சாதியாரின் எண்ணங்களையும் கருத்துக்களையும் எழுப்பிவிட்டவர் இப்பொழுது காய ஆறந்திருகின்றார்" என்றார். மேலும் "நீர் உயிரோடிருந்த காலத்தில் உமமைப் புகழ எனக்குக் கூடக்கவில்லை. ஆகிலும் நான் இப்பொழுது உமது புகழ்களைப் பாடுகிறேன். மேன்மையுள்ள பிராணத்தியாகியே நான் கட்டியதை யழிக்காதீர்கள் என்ற உமது சத்தம் எங்களுக்கிடையில் முன் கேட்டது போலவே இப்பொழுதும் கேட்கின்றது" என்று கூறிவிட்டு முஸ்தபா காமலைக்குறித்து "அவர் எங்களை அனிகுலையவேண்டாமென்றும, மனிதர்களைப்போல் நடக்கும்படிக்கும், எங்கள் சத்துருக்கு ஆநந்தத்தைக் கொடுக்கவேண்டாமென்றும் அல்லாவுடைய நாமத்தில் கேட்கின்றார். மேலும் அவர் எனது றாகு கபுறிலிருந்து உங்களைப் பார்க்கும. நான் தேய்ந்துபோனாலும அது இருந்து உங்கள் ஜயத்தில் பங்குபெறும். அன்னியோன்னியமான அழிவுண்டாக்கத்தக்க சண்டைகளையும் பலவீனத்தையும் கொண்டு என்னைத் துக்கப்படுத்தாதீர்கள் என்று சொல்லுகிறார்" என்று மேற்படி புலவர் பகர்ந்தனர். பின்பு புலவர் தாமே இறந்த சுதேசாபிமானியின் வார்த்தைகளுக் குத்தரமாய் "நீர் எங்களுக்கு வெற்றிக்கு வழியைக் காட்டினீர். நீர் எங்களை விட்டுப் போனபொழுது நாங்களிருந்தபடியே இப்பொழுதுமிருக்கின்றோம். மேலும நாங்கள் அப்படியே எப்பொழுதும் இருப்போம். நீர் உமது கபுறில் ஆறுதலோடிரும். நீர் கட்டிய கட்டடம் நன்றாய்ப் பாதுகாக்கப்படுகின்றது. உமது ஆவி இன்றும் எஙகள் முன்னிருக்கிறது. நீர் தூரப்பட்டிருந்தாலும் உமது சத்தம் நன்றாய்க் கேட்கப்படும. நீர் அழவில்லையென்றும் நீர் அழுகையை யெப்பொழுதாவது புகழவில்லை யென்றும் நாஙகளறிவோம். ஆகிலும் நாங்கள் இன்று துக்கத்திலிருப்போம். நாளை நாங்கள் மலைகளைப்போலும் கற்களைப்போலும் திடமாயிருப்பதை நீர் காண்பீர். நாங்களப்படி யிருப்பதையே நீரும் விரும்புவீர். நீர் ஓரே மனிதனையிராது வெற்றியடைகின்ற வோர் சேனையாயிருந்தீரென்பதை யுமது ஆயுளின் முப்பது வருடங்களும் சரித்திரத்திற்குச் சாக்ஷியிடும்" என்று கூறினர்.

பின்பு மேற்படி கவிஞர் கடைசியாய் "மிஸ்றே நீ அவரின் ஞாபகத்தை யெப்பொழுதும் புதிதாக்கிக் கொள்ளாதிருக்கில் உனக்கே துக்கம். அப்பொழுது உன்னை பிறிட்டிஷியர் நியாயத்தீர்ப்பின் நாள்வரையில் பிடித்திருப்பார்கள்" என்று சொன்னார்.

## இடம்.

இடத்தைப்பற்றிய பூர்வ கருத்துகள் மனிதனின் சொந்த சிந்தனையின் அளவைக்கொண்டே கொள்ளப்பட்டன. அங்குலம், அடி, முழம் என்பவை மனிதனின் தேகத்தின் பாகங்களின் நீளங்களே. இவை மனிதன் சந்திக்கின்ற சிறு வஸ்துக்களை யளக்குதற்கு உபயோகப்படுகின்றனவாய்த் தோன்றின. ஆயிரம் இரட்டை அடிகளைக்கொண்டு கடக்கப்படுகிற தூரமே ஒரு மைல் என்றும், ஒரு மணித்தியாலத்தில நடக்கக்கூடிய தூரமே மூன்று மைல் என்றும் மதிக்கப்பட்டன. கண்ணுக்குத் தெரிகின்ற அடிவானமே பூமி தட்டையானதென்றும் அதன் மேற் பரப்பு "ரவுண்டு" மேசையைப்போல் வட்டமானதென்றும எண்ணச் செய்திற்று. ஆகிலும அனுபோகத்தைக்கொண்டு பூமி ஒரு அடிவானத்திற்கப்பால் பரந்திருக்கிறதென்று அறியப்பட்டபொழுது காலத்திற்குக்காலம் பூமிசாஸ்திரத்திற்குத் தெரியவந்த தேசங்களையெல்லாம் அடக்கிக்கொள்ளத்தக்கதாய "ரவுண்டு" மேசையைப்போல் எண்ணப்பட்டிருந்த பூமியின் பருப்பம் அதிகப்படுத்திக் கொள்ளப்பட்டது.

இப்படியே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை அவை தோன்றுகிற தூரத்தில் இருக்கின்றனவாய்க் கொள்ளப்பட்டன. மேலும் அவை இரவில் மேற்குத் திசையில் கீழே இறங்குவனவாயும் பகலில் கிழக்குத்திசையில் மேலே கிளம்புகின்றனவாயும் இருந்தனவால் அவை இத்தட்டையான பூமியைச் சுற்றுகின்றனவென்பது சந்தேகிக்கப்படவில்லை. ஆகலால் முற்காலத்தில் பிரபஞ்சத்தைக்குறித்து வுண்டாயிருந்த கருத்தாவது ஓர் தட்டையான பூமி சமுத்திரத்தால் வளையப்பட்டதாக ஓர் பளுங்குபோன்ற கோளத்தின் மத்தியிலிருக்கிறதென்பதும, அந்தக்கோளம் இருபத்து நான்கு மணித்தியாலத்தில பூமியைச் சுற்றுகிறதென்பதும், மனிதன் நாட்களையும் காலங்களையும் அறிந்துகொள்வதற்காய் மேற்படி கோளத்தில் நட்சத்திரம் முதலானவை வெளிச்சங்களாய் நிறுத்தப்பட்டிருக்கின்றன வென்றதுமே. ஆதலால் அக்காலத்தில அறியப்பட்டிருந்த தேசங்களை யடக்கிக்கொள்ளுதற்குப் பூமி இருக்கவேண்டிய பருப்பத்தையும அதைச் சுற்றியுள்ள சமுத்திரத்தின் பருப்பத்தையும், அதற்கும் பளுங்கு போன்ற வில்வளைவுக்கும் இடையில் இது தாராளமாயச் சுற்றுதற்கு வேண்டிய தூரத்தையும் கொண்டு இடத்தின் அளவு மதிக்கப்பட்டது. ஹோமருடைய காலத்திலும் பூர்வ கிரீக்கு ஞானிகளுடைய காலத்திலும இடத்தின் பருப்பம் 5000 முதல் 10.000 மைல் வரையில் மதிக்கப்பட்டது. ஆகிலும் இந்தப்பருப்பம் தற்கால சாஸ்திரத்தைக் கொண்டோ அனேகனேக மிலியன் மைல்களாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இன்னும் அதன் அந்தம் எட்டியதற்கு அடையாளத்தைக்காணோம்.

இந்த அதிஜயமான காரியம் எவ்வாறு அறியப்பட்டதென்றும் இது நிசமெனபதற்கு அத்தாட்சி யாதென்றும் வாசிப்பவர்கள் கேட்கலாம். இதைத் தீர்க்கமாய் அறிய நாடுகின்றவர்கள் வானசாஸ்திரத்தைப்பற்றிய நூற்களைப் படிக்கவேண்டும். ஆகிலும் அ

ந்த முடிவைக் கண்டுகொண்ட வொழுங்கைப்பற்றிய சில கருத்துகளை நாம் இங்கு சொல்லலாம். மேலும் நாங்கள் இந்திரியங்களைக்கொண்டு அறிந்திருக்கின்றவைகளுக்கு மாறான காரியங்களையொப்புக்கொள்ளுதற்குள்ள நியாயத்தின் வலிமையையும் எடுத்துக்காட்டலாம்.

மனுஷனின் உறுப்புகளைக்கொண்டு அளக்கக்கூடாத இடத்தின் அளவுகளை அறிகின்ற முறை விசேஷமாகிறது அடியின் (மூர்த்தத்தின்) மாறுதலுக்குத் தக்கதாய்த் தூரமான வஸ்துக்களின் திசைகள் மாறுமென்றதே. நாம் கடலில் அல்லது பருப்பமான ஆற்றில் ஓர் கப்பலில் போகும்பொழுது எமக்கு முன்னே வடபாகத்தில் இரண்டு வீடுகள் கரையில் இருக்கக் கண்டோமென்று எண்ணிக்கொள்வோம். ஒரு வீடு ஒரு மைல் தூரத்திலும் மற்றது பத்து மைல் தூரத்திலும் இருக்கின்றன. நாம் கிழக்குத்திசையால் ஒரு மைல் தூரம் சென்றுவிட்டு மேற்படி வீடுகளின் திசைகளைப்பார்த்தால் முந்தின வீடு வடமேற்கில் 45 டிக்கிரியும் இரண்டாவது வீடு 5 டிக்கிரியும் மாறியிருப்பதைக் காண்போம். கணிதசாஸ்திரத்தின் ஓர் பிரிவாகிய முக்கோண சாஸ்திரத்தைக்கொண்டே ஓர் குறிப்பான அடியினிரு அந்தங்களிலிருந்து அளக்கப்பட்ட வஸ்துக்களின் பெயர்ச்சியைக்கொண்டு அவ்வஸ்துக்களின் தூரம் திட்டமாய் அறியப்படுகிறது. முதலாவது காரியம் அடி அல்லது அத்திவாரம் திட்டமாய் அறியப்படுகிறது. இதற்கு நாங்கள் வசிக்கின்ற பூமியின் கோலமும் பருப்பமும் திட்டமாய் அறியப்படவேண்டும். இவற்றை யறியும் விதத்தைச் சொல்லுகின்றோம்.

நாம் தூரமான நட்சத்திரமொன்றைப் பார்த்துக்கொண்டு நேரான வரியில் ஒரு மைல் தூரம் நடந்துவிட்டு அந்நட்சத்திரத்தைத் திரும்பப்பார்த்தால் அதன் இடம் மாறியிருப்பதைக் காணமாட்டோம். ஆகிலும் அந்தமட்டுத் தூரத்தையோர் அரைவட்டத்தில் நடந்துவிட்டுப் பார்த்தால் முன்னெமது இடப்பக்கத்தில் தோன்றிய நட்சத்திரம் இப்பொழுது வலப்பக்கத்தில் தோன்றுவதைக் காண்போம். அந்நட்சத்திரம் 180 டிக்கிரி அகன்றிருக்கும். நாம் ஒரு மைல் நடந்த வட்டம் இரண்டு பங்கு பெருப்பமுள்ளதாயிருந்தால் நான் அதில் நாலிலொருபங்கு நடந்திருப்பதோடு நட்சத்திரமும் 90 டிக்கிரி அகன்றிருக்கும். இவ்வாறே நாம் நடக்கும் வட்டத்தின் பருப்பத்திற்குத் தக்கபடி தூரவஸ்தின் நிலையும் மாறும். பின்னையோர் தூரமான நட்சத்திரத்தின் நிலையில 1 டிக்கிரி மாறுதலுண்டாகுதற்கு ஓர் வட்டத்தில நடக்கவேண்டிய தூரத்தைக் கொண்டு அந்த வட்டத்தின் பருப்பத்தைக் கணித்துக்கொள்ளலாம். உதாரணம்: நாங்கள் இப்பூமியில் வடக்கிலிருந்து தெற்குக்கு 65 மைல் பிரயாணஞ்செய்தபொழுது எங்களுக்கு நேரே தோன்றுகிற துருவ நட்சத்திரத்தின் நிலை 1 டிக்கிரி மாறியதைக் காண்போமாயின் நாங்கள் அந்த 65 மைலையும் ஒரு சக்கரத்தில் நடந்தோமன்றித் தட்டையான பரப்பில் நடக்கவில்லையென்றும், அந்த சக்கரத்தின் பருப்பம் 360 தரம் 65 என்றும் கணித சாஸ்திரப்படி திட்டமாய்த் தீர்மானிக்கலாம். (வட்டம் எப்

பொழுதும் 360 டிக்றிகளாய்ப் பிரிக்கப்பட்டேயிருக்கும்). அப்பொழுது அந்த சக்கரம் கிட்டத்தட்ட 24,000 மைல் சுற்றளவும் 8000 மைல் குறுக்களவுமுடையதாகும். இனி நாம் பூமியின் பரப்பில் எந்த விடத்திலாவது வடக்கிலிருந்து தெற்குக்கு 65 மைல் பிரயாணஞ்செய்யும் பொழுது நட்சத்திரத்தின் நிலை ஒரு டிகறி மாறுமாயின் நமது யாத்திரையோர் மெய்யான வட்டத்தில் செய்யப்படுகிறதென்றும் பூமி மேற்படி பிரமாணத்தை யுடையவோர் உண்டையென்றும் திட்டப்படுகிறது.

இதுவே சாஸ்திரிகள் பூமியை சாஸ்திரமுறையாய் அளக்கும் பொழுது சம்பவிக்கிறது. பூமி சரியாய் உண்டையானதல்ல. அது துருவங்களில் கொஞ்சந் தட்டையானது. வடக்குக்குந் தெற்குக்குமுள்ள வோர் உருவானவிதத்தில் நீர்த்தன்மையான வோர் பிண்டம் சுழன்றால் எவ்வாறிருக்குமோ அவ்வாறே பூமி யிருக்கின்றது. பூமியின் துருவங்களுக்கிடையிலுள்ள குறுக்களவு 7899 மைல், மத்திய குறுக்களவு 7925 மைல், ஆதலால் காரியத்தில் பூமியின் சுற்றளவு 24,000 மைல் என்றும் குறுக்களவு 8000 மைலென்றும் சொல்லப்படுகின்றன.

இதனால் இன்னும் அதிகமான தூரங்களை யளவிடுதற்கும் ஓர் புது அளவு கிடைத்திருக்கின்றது. நாம் முன் சொன்ன வுதாரணத்தில் கப்பலிலிருந்து கரையிற் றோன்றிய வீட்டின் தூரத்தை யெவ்வாறு திட்டமாய் அறிந்துகொண்டோமோ அவ்வாறே சூரியனின் தூரத்தை அதன் நிலைபெயரும்வரையில் பூமியின் பரப்பில் ஒரு தூரத்தின் இரு முனைகளிலிருந்து பார்ப்பது கொண்டு அறிந்து கொள்ளலாம். இந்த விதிப்படி பார்க்குமிடத்தில் சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் கிட்டத்தட்ட 93,000,000 மைல் என்றறியப்படுகின்றது. இனி இந்தமட்டுத் தூரத்துக் கப்பாலுள்ள சூரியன் நாமங்கனந் தனைக் காண்கின்ற பருப்பத்தில் தோன்றுதற்கு எவ்வளவு பிரமாணத்தை யுடையதாயிருக்கவேண்டுமென்று மேற்படி தூரத்தைக்கொண்டு அறியக்கூடியதாயிருக்கிறது. அப்படி அறியப்பட்டபொழுது சூரியன் 880,000 மைல் குறுக்களவுள்ள வோர் உண்டையாய்த் தோன்றுகிறது. அதன் தடிப்பு பூமியின் தடிப்புக்கு 1க்கு 1,381,000 பங்கு அதிகப்படுகின்றது. சூரியனிலுள்ள சடப்பொருள் எந்த மட்டென்று அதற்கு 93,000,000 மைல் தூரத்தில் பூமியின் மீதுள்ள கவர்ச்சியைக்கொண்டு கணிக்கப்படுகின்றது. சூரியன் 354,936 பூமிகளின் பாரமுள்ளதாம்.

மேலே தரப்பட்டதை வாசிப்பவர்கள் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரத்தையும் அவற்றின் பருப்பத்தையும் சாஸ்திரிகள் அளவிட்டுக் கொண்ட விதத்தை விளங்கிக் கொள்வார்களென்று நம்புகின்றோம். ஒரு வானசாஸ்திரி பூமியில் ஓர் இடத்தில் நின்று தமது கருவியைக் கொண்டு சூரியனைப்பார்த்து அதனைத் தமது கருவியில் ஒரு தானத்தில் நிறுத்திக்கொண்டு கொஞ்சந் தூரம் பூமியில் நடந்துவிட்டுத் திரும்பவும் தமது கருவியில் சூரியனைப் பார்க்கும்பொழுது அதன் நிலை முன் அவர் வைத்தவிடத்திலிருந்து கொஞ்சம் மாறியிருக்கக் காண்பார். அப்பொழுது அவர் தாம் பூமியில் நடந்த தூரத்தையும் தமது கருவியில் சூரியனின் நிலை மாறிய அளவையும் கொண்

டு சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரத்தைக கணித்துக்கொள்வார். அவருடைய கருவியில் சூரியனின் நிலையில் தோன்றிய மாறுதலுக்குப் பெயர்ச்சியென்று சொல்லப்படுகிறது. அவர் பூமியில் நடந்த தூரத்திற்கு அடி அல்லது அத்திவாரம் என்று சொல்லப்படுகிறது. இனி அவ்வாறு சூரியனுக்கும் பூமிக்குமிடையி லறியப்பட்ட தூரத்தையும் சூரியன் தற்போது எங்களுடைய கண்ணுக்குத் தோன்றுகிற பருப்பத்தையும் கொண்டு சூரியனின் மெய்யான பருப்பம் மதிக்கப்படுகிறது. மேற்படி அத்திவாரம் வட்டமாயிருந்தாற்றான் பெயர்ச்சிதோன்றும். ஆதலால் மேற்படி சாஸ்திரியின் கருவியில் மேற்படி பெயர்ச்சியைக் காண்பதற்கு மேற்படி சாஸ்திரி பூமியில் நடந்த தூரத்தை, அதாவது அத்திவாரத்தைக் கொண்டு பூமியின் முழுவட்டத்தின் பருப்பம் கணிக்கப்படுகிறது. அந்த அத்திவாரம் பூமியின் வட்டத்தின் ஒரு பாகமே. வட்டம் எப்பொழுதும 360 பங்குகளை (டிக்றி) கொண்டதாகவே கவனிக்கப்படும். மேற்படி சாஸ்திரியின் கருவியிலும் 360 டிக்றிகளுள்ள வோர் வட்டமிருக்கும். இனி மேற்படி சாஸ்திரி பூமியில் 65 மைல் தூரத்திற்குச் சூரியன் 1 டிக்றி பெயர்க்கிறதைக் கண்டவுடன் தாம் பூமியில் நடக்கிற வட்டம் 360 தரம் 65 மைலென்று கணித்துக்கொள்ளுகிறார். இந்த வொழுங்கை வாசிப்பவர்கள் மனதில் பதிவாக்கிக்கொண்டால் நாம் மேலே சொல்லியதும் பின்னே சொல்லப்போகிறதும் நன்றாய் விளங்கும்.

இந்த வொழுங்கைக் கொண்டு நாங்கள் சந்திரனினதும் மற்றும் கிரகங்களினதும் தூரம், பருப்பம், பாரம் ஆகியவைகளை யறியக் கூடியவர்களா யிருக்கின்றோம். மேலும் இந்த வொழுங்கு இன்னும் அதிகமான தூரங்களையும் அளவிடுதற் கிடங்கொடுக்கின்றது. பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் 93 மிலியன் மைலென்றால் பூமி சூரியனை ஒரு வருடத்திற் சுற்றுகிற மண்டலம் 558 மிலியன் மைல் சுற்றளவுள்ளது. அதன் குறுக்களவு 186 மிலியன் மைல். பின்னை பூமி இன்று அது நிற்கிற விடத்திலிருந்து 186 மிலியன் மைலுக்கப்பால் இன்னும் ஆறு மாதத்தில் நிற்கும். இந்த 186 மிலியன் மைலையும் ஓர் அத்திவாரமாய்க் கொண்டு அதனிரு அந்தங்களிலு மிருந்து நிலையான நட்சத்திரங்களைப் பார்க்கும்பொழுது அவற்றுள் அதிகப்பற்றனவைகளின் நிலையில் யாதும் வித்தியாசத்தைக் காணவில்லையாம். அவை மெத்தவும் தூரமாயிருப்பதினாலேயே 186 மிலியன் மைல் நீளமான அத்திவாரத்தைக்கொண்டு பூமியிலிருந்து பார்த்தும் அவற்றின் நிலையில் யாதும் பெயர்ச்சி கருவிகளுக்குத் தோன்றவில்லை. ஆனால் இக்காலத்தில் வானசாஸ்திரிகளிட மிருக்கிற கருவிகள் எந்தமட்டுப் பூரணமானவைகளாயின் எந்த நிலையான நட்சத்திரத்தின் வருடாந்த ஸ்தான பேதத்தில் ஒரு ஸெகண்டு அல்லது ஒரு டிக்றியில் 3600இல் ஒருபங்கு மாறினாலும் அக்கருவிகளில் தோன்றும். அந்தமட்டு வித்தியாசம் ஒரு நட்சத்திரத்தின் நிலையில் தோன்றினால் அந்த நட்சத்திரம் நாம் முன அத்திவாரமாய்க் கொண்ட 186 மிலியன் மைலைப்பார்க்கிலும் 206,265 பங்கு அதிகமான தூரத்தில இருக்கவேண்டும். அந்தத்தூரம் 20,000.000,000,000,000

மையிருக்கும். இந்தமட்டுத்தூரத்தை வெளிச்சம் ஒரு ஸகண்டுக்கு 184,000 மைல் விதம் ஊடுருவிச் செல்லுதற்கு 3 வருஷமும 83 நாட்களும் பிடிக்கும். வானமுழுதிலும் "அல்பா" என்றவோர் பிரகாசமுள்ள நட்சத்திரம் மாத்திரமே சன்றேரி என்ற இராசியில் மேற்படி கணக்கிற்கு நெருங்கியிருக்கின்றது. அதன் வருடாந்த ஸ்தான பேதம கிட்டத்தட்ட 1 ஸகண்டு இருக்கிறது. ஆதலால் அந்த நட்சததிரத்திற்கும் பூமிக்குமுள்ள தூரம 20 மில்லியன் மில்லியன் மைல். தூரதிருஷ்டிக்கண்ணுடிக்கூடாய்த் தோற்றுகிற மில்லியன கணக்கான மற்றும நட்சததிரங்கள் மேற்படி தூரத்திற்கு மப்பாலிருக்கின்றன.

இன்னும் ஏறக்குறைய எட்டு நட்சத்திரங்களிருக்கின்றன. அவற்றின் நிலே அரை ஸகண்டு பேதகப்படுகிறதாய் வானசாஸ்திரிகள் எண்ணுகின்றார்கள். ஆதலால் அவற்றின் தூரம் அல்பா ஸன்றேரியின் தூரததைப்பார்க்கிலும் இரண்டு முதல் பத்து பபங்கு அதிகமாயிருத்தல்வேண்டும். அவ்வளவு தூரத்திலிருந்து வருகிற வெளிச்சத்தின் அளவைக்கொண்டு அவற்றின் பிரகாசத்தைச சூரியனின் பிரகாசத்தோடு வானசாஸ்திரிகள் சீர்தூக்கிப் பார்க்கின்றார்கள். சூரியனின் பிரகாசத்தைப பார்க்கிலும் அல்பா ஸன்றேரியின் பிரகாசம் $2\frac{1}{2}$ பங்கும் ஸீரியஸின் பிரகாசம் 393 பஙகும் அதிகமாம். ஸீரியஸ்லே வானத்திலுள்ள மிக்க பிரகாசமுள்ள நடசத்திரம். இவைகளெல்லாம் பிரபஞ்சத்தின் அளவைக் காட்டுகின்றன. இதில் நாம் வசிககிற பூமியம்மாத்திரம் சிறியது.

இதைக்கொண்டு தானும் வெளியின் ஆழம் அளவிடப்படவில்லே. தூரதிருஷ்டிக் கண்ணுடியைக் கொண்டு பல பருப்பத்திலும் பிரகாசத்திலுமுள்ள அளவிறந்த நட்சத்திரங்களைக் காண்கின்றோம். வெளியின் ஆழத்தை யளவிடுதற்கு ஹர்சல் என்பவர் உபயோகித்த கண்ணுடிக்கு நாறு மில்லியன் நட்சத்திரஙகளும் லார்டு றேஸ் என்பவரின் பெரும் தூரதிருஷ்டிக் கண்ணுடிக்கு ஆயிரம் மில்லியன் நட்சத்திரஙகளும் தோன்றுகின்றனவென்றும வானசாஸ்திரிகள் கணக்கிடுகின்றார்கள். அவை பதினெட்டு அளவுகளாய் வகுக்கப் பட்டிருக்கின்றன. கண்ணுடியின் தத்துவம் அதிகப்படுகிறதோடு நட்சத்திரங்களும் அதிகமாய்த் தோன்றுகின்றன. அவற்றின் பிரகாசம் வித்தியாசப்படுவது அவையொன்றுக்கொன்றுள்ள தூரத்தாலன்றிப் பருப்பத்தாலல்ல. ஆதலால் பதினெட்டாமளவிலுள்ள நட்சத்திரம் முதலாமளவிலுள்ள நடசத்திரத்தைப் பார்க்கிலும தூரமாயுள்ளது. முதலாமளவிலுள்ள சமீபமான நட்சத்திரமே 20 மில்லியன் மில்லியன் (20,000,000,000,000,000) மைல் தூரமானதென்று முன சொன்னேம. இவ்வாறு நட்சத்திரஙகளின் தூரமிருப்பதால் அதனை மனிதர் விளங்கிகொள்வதற்காக வெளிச்சம் செலலுகிற வேகத்தை யோர் அளவாய் வானசாஸ்திரிகள் எடுக்கின்றார்கள். வியாழன் என்ற கிரகத்தைச் சேர்ந்த உபக்கிரகங்களின் கிரகணங்களைக்கொண்டு வெளிசசம 16 நிமிஷஙகளில் 186 மில்லியன் மைல் யாத்திரை செய்கிறதாக வானசாஸ்திரிகள் கணித்தறிந்திருக்கின்றார்கள். ஆதலால் வெளிசச

த்தின் கதி ஒரு ஸகண்டுக்கு 184,000 மைல். இவ்வளவு கதியாய்ச்செல்லுகின்ற வெளிச்சம் மேலே காட்டப்பட்ட தூரங்களை யெத்தனை வருடங்களில் கடக்கின்றதென்று பார்ப்போம். இப்பொழுது நாம் அல்பாஸன்ரோரி யென்ற நட்சத்திரத்தில் காண்கிற கதிர் 3 வருடங்களுக்கும் 83 நாட்களுக்கும் முன் அதிலிருந்து வெளிப்பட்டு ஒரு ஸகண்டுக்கு 184,000 மைல் விதம் ஆகாயத்தை யூடுருவி வந்ததே. நிலையான நட்சத்திரங்களுள் மிக்க பிரகாசமுள்ளதான ஸீரியஸ் இன்னும் ஆறுபங்கு அப்பாலுள்ளது. ஆதலால் அது இப்பொழுது எங்களுக்குத் தோன்றுகிறது கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன் யிருந்தபடியேயன்றி இப்பொழுதிருக்கிறபடியல்ல. நாங்கள் இப்பொழுது காண்கின்ற பதினெட்டாமளவிலுள்ள சில நட்சத்திரங்களின் வெளிச்சம் அவற்றிலிருந்து 2000 வருடங்களுக்கு முன் வெளிப்பட்டிருக்க வேண்டும்.

இதுதானும் வெளியின் அளவை யெங்களுக்குப் பூரணமாய்க் காட்டவில்லை. வெவ்வேறாய்த் தோன்றுகிற நட்சத்திரங்களுக்கப்பால் பதினாயிரக்கணக்கான நட்சத்திரங்களின் சோதி ஒன்றாய்த்திரண்டு ஓர் களங்கமாய்த் தத்துவமுள்ள கண்ணாடிகளுக்குத் தோன்றுகிறதாக வானசாஸ்திரிகள் கூறுகின்றார்கள். மேலும் நட்சத்திரங்களல்லாமல் நட்சத்திரகணம் என்று சொல்லப்படுகின்ற மங்கலான வெளிச்ச வில்லைகளும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளுக்குத் தோன்றுகின்றன. அவற்றுள் சில உண்மையாகவும் சில மாலைகளைப்போலும், சில வைக்கோற் கட்டைப்போலும், வேறு பல கோலங்களிலும் வானமுழுதிலும் சிதறி இருக்கின்றன. அவை எங்களுடைய சூரியன், சந்திரன், பூமி நட்சத்திரங்கள் முதலியவை அடங்கிய வுலகக் கட்டைப்போன்ற வேறு உலகக்கட்டுகளென்று வானசாஸ்திரிகள் நம்புகின்றார்கள். இவற்றுள் சில பூரணமாய் உண்டாக்கப்பட்டவைகளாகவும் சில தற்போதுண்டாக்கப்படுகின்றவைகளாயும் இருக்கின்றன.

இவ்வாறே பிரபஞ்சமுள்ள இடத்தை அல்லது வெளியைப்பற்றி நாங்கள் முன் அறிந்திருந்த மைல் கணக்கான பருப்பம் கொஞ்சங் கொஞ்சமாய், எங்கள் அறிவு அதிகப்பட அதிகப்பட, விரிந்து இப்பொழுது அளவற்றதாய்த் தோன்றுகிறது.

இன்னும் வரும்.

---

பிஸ்மில்லாஹ்,

## புகழத்தக்கப் பத்திரிகை.

(முஸ்லிம் பாதுகாவலன்.)

—o—

உலகத்தி னெப்பகுதிகளினுஞ் சிறந்துத் திலதமாய்த் துலங்கும் இலங்கையின்கண் அநேகத் தமிழ் பத்திரிகைகளுதித்து விளங்கி, மறைந்துப்போனது போக தற்போது சில பத்திரிகைகள் நிலைபெற்று நடைபெறுகிறதென்பது தண்மை.

அப்பத்திரிகைகளி னடுநாயகமாயப் பிரகாசிக்கானின்ற ஓர் அரும் பத்திரிகையை யாம் பெற்று வாசித்து, அதின் சாராம்சங்களை யுணர்ந்து பலமுறையு மனனந்தித்து வருகின்றேம். அன்றியும் பல தேயங்களினு நிகழ்ந்த புதின விஷயாதிகளும், பண்டின்

ளோர் சரித்திரங்களும் பல அரசர், அமீர் முஸ்லிம் பிரதானிகள், விசித்திரவெழுத்துகள் மூதலியதின் பிரதிவிம்பப் படங்களையுங்கண்டு மனமகிழ்கொண்டு, விண்டுரைத்துப் புகழத்துணிந்தேன்.

அப்பத்திரிகையிற் றுலக்கப்படும் பொட்டோகிருப் (படங்கள்) புகழத்தக்கது, இங்கிலீஷில் பத்திராதிபர் குறிப்பு புகழத்தக்கது, விஷயங்கள் புகழத்தக்கவை, வாசகத்தின் றெளிவு புகழத்தக்கது, நீண்டவிடயங்களை சுரிக்கி விளக்குவது வியந்தும் புகழத்தக்கது. போதனைக ளொவ்வொன்றும் புகழத்தக்கது. முத்தாரம் போன்ற புதிய தமிழெழுத்துப் புகழத்தக்கது, புத்தகவடிவு புகழத்தக்கது, பைண்டிங்வேலைப் புகழத்தக்கது, அப்பத்திரிகையின் தாள் முழுதும் புகழத்தக்கது, பத்திராதிபரின் கல்வித்திறமை புகழத்தக்கது, அவரின் பிரசங்கங்கள் உணர்ந்து புகழத்தக்கது. அப்பத்திரிகையை போஸ்டில் ஒவ்வொருவரு மரியாதியாயனுப்புவது பார்த்துப் புகழத்தக்கது.

இத்தாதி விஷயங்களினும் புகழத்தக்கப் பத்திரிகையாகிய "முஸ்லிம் பாதுகாவலன்" சஞ்சிகையை மாதங்கடோறுந் தவறாது பெற்றுவந்தோம. இச்சஞ்சிகையோடு 6ம் புத்தகமுடிவுறுவதனால், 7ம் புத்தகத்தை யெதிர்பார்க்கின்றோம். இப்பத்திரிகையை முறைதவறு தெமக்கனுப்பிவருவது பத்திராதிபரின் கடனும். அதின் சந்தாவை சுணக்காதனுப்புவது எமது கடனும்.

பத்திராபிமானிகாள் !

இப்பத்திரிகைக்கு யாம் செலுத்திய தொகையோ மிக சொற்பம். அதாவது வருடமொன்றுக்கு ரூபாய் ஐந்து. இச்சிறிய தொகையை யாம் செலுத்தி யாமெங்கேனுங்கண்டிராத மேதாவிகளின் படங்களும், ஆகமங்களும், நல்லறிவுகளும், நல்லுபதேசங்களும் ரோககப்பெற்றது பெரும்பாக்கியமேயாம்.

தமிழறிந்த வொவ்வொருவருமிந்தப் பத்திரிகையை ஆதரித்து மேலுமேலு மாங்காங்கே கையொப்பங்களைப்பெருக்கி பத்திராதிபருக்கு வுற்சாகமூட்டிவருவதும் கடமையாகும், அவரவர்களுந்தந்த ஊர்களில் சந்தாதார்களைச் சேர்த்துவருவார்களென்ற நன்னம்பிக்கை யெமக்குண்டும் அதுபோல் றகுமானிப் பத்திரிகை நீடூழிகாலம் நிலைபெற்று வருமுக் கருணை புரிவானாக ஆமீன். யாறப்பல் ஆலமீன்.

இங்ஙனம்.
அ. மு. செய்கப்துல் காதிறு.
சிங்கப்பூர், இந்திய முஸ்லிம் சுசைட்டி.
கணிதாதிகாரன்.

---

## எமது கைபொப்பக்காரர்களுக்கு விஞ்ஞாபனம்.

கனவான்களே,

இச்சஞ்சிகையோடு எமது முஸ்லிம் பாதுகாவலனின் 6ம் புத்தகம் பூரணப்படுகின்றது. அதில் தரப்பட்ட படங்களும் செய்திகளும் தங்களாலும் பிறராலும் நன்குமதிக்கப்பட்டன வென்பதற்குப் பல சாட்சிகள் தோன்றியிருக்கின்றன. எமது பத்திரிகையை வாசிப்பவர்களுக்குத் திருப்தியைக் கொடுத்தற்கு எம்மாலேன்றியதைச செய்திருக்கின்றோம். அது அச்சிடப்படுகின்ற "இண்டிபெண்டென்று" அச்சியந்திரசா

லை கொழுப்பில் மிக்க அதிக வேலைகள் செய்யப்படுகின்ற வோர்தானம். ஆதலால் அதன் மனேஜர் தாம் பொருந்திக்கொண்ட காலத்தில் எம் பத்திரிகையை வெளிப்படுத்தற்குச் சில தருணம் தாமதப்படுவதைக் குறித்து வாசிப்பவர்கள் குறை நினைக்கக்கூடாது. இந்த வருடம் எமது பத்திரிகைக்குச் செல்லவேண்டிய பணத்தைச் செலுத்தி அதனைத் தயவோடு அங்கீகரித்த எமது கையொப்ப நண்பர்களுக்கு வந்தனங் கூறுவதோடு அப்படியே எக்காலமும் எமது பத்திரபுத்திரனை யாதரிக்குமாறு அவர்களை வேண்டுகின்றோம்.

அடுத்தவருடம் எமது கையொப்ப நேயர்களுக்கு வழக்கம் போலவே பத்திரிகை யனுப்புவோம். அதனைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்கள் தம் மபிப்பிராயத்தை யெமக்குத் தாமதமின்றித் தெரிவிப்பார்களாக.

அடுத்தவருடம் “முஸ்லிம் பாதுகாவலன்’ 44 பக்கங்களையுடையதாய் வெளிக்கிடும். மேலதிகமான 4 பக்கங்களிலும் இங்கிலீஷில் விஷயங்கள் எழுதப்படும்.

எமது கையொப்பக்காரர்கள் இதனோடு முடிவுபெறுகின்ற 12 சஞ்சிகைகளையும் ஓர் புத்தகமாய்க் கட்டிக்கொள்ளும்பொருட்டு புத்தக முகவுரையும் அட்டவணையும் படங்களின் டாப்பும் தமிழிலும் இங்கிலீஷிலும் இதனோடு ஒவ்வொரு கையொப்பக்காரருக்கு மனுப்புகின்றோம்.

முற்றிற்று.

6782

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY